24-5-1952 M.Y.M BANGALORE, 2


# போர்வாள்

வாள் 5 வீச்சு 34

24-5-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் B A. Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2


# படிப்பது இராமாயணம்! இடிப்பது பெருமாள் கோயில்!

## "அரசியல் உலகில் நுழையாதீங்கோ!"

## ஆச்சாரியாரின் தர்மோபதேசம்

★

"பிச்சையெடுப்பது மகா பாவம்! தயவு செய்து நீங்கள் யாரும் பிச்சையெடுக்க ஆரம்பித்துவிடாதீர்கள்—அது மகா கெட்ட வழக்கம்!"—தன்னைச் சுற்றி உட்கார்ந்திருக்கும் நான்கைந்து பேரைப் பார்த்து நாராயணசாமி இதுபோலக் கூறுகிறான். அவன் இப்படிக் கூறியதுதான் தாமதம், அந்த நான்கைந்து பேரும் வெடி வெடித்தது போலச் சிரிக்கிறார்கள். ஏனப்பா சிரிக்கிறீர்கள் என்று கேட்கிறான் நாராயணசாமி. ஏன்? தெரியவில்லையா உனக்கு? என்று கேட்டுவிட்டு, நாராயணசாமியின் கையிலிருக்கும் பாத்திரத்தைச் சுட்டிக் காட்டுகிறார்கள் அந்த நான்கைந்து பேரும்! நாராயணனின் கையிலிருப்பது ஒரு பிச்சைக் கிண்ணி! ஆம்! பிச்சையெடுப்பதையே தன்னுடைய பரம்பரைத் தொழிலாகக் கொண்டவன் நாராயணன்! அவன் கூறுகிறான் மற்றவர்களைப் பார்த்து, பிச்சையெடுப்பது மகா பாவம், தயவு செய்து யாரும் பிச்சையெடுக்க முன்வராதீர்கள் என்று! சிரிக்காமலா இருப்பார்கள் மற்றவர்கள்?

* * *

வீதி வழியே வேகமாகப் போய்க்கொண்டிருந்த வரதப்பனை கையைப்பிடித்து இழுத்து நிறுத்தினான் கந்தப்பன். என்னப்பா கந்தப்பா, ஏண்டாப்பா என்னை நிறுத்தினாய் என்று கேட்டான் வரதப்பன். "ஒன்றுமில்லை வாதா! உனக்கொரு வார்த்தை! திருட்டுத் தொழில் மிகமிக அக்கிரமமான தொழில். அது பஞ்சமா பாதகங்களில் ஒன்று. வேறு எந்தக் குற்றத்தைப் புரிந்தாலும் புரியலாம். ஆனால் திருட்டுக் குற்றம் ஒன்றைமட்டும் புரியக்கூடாது." என்று வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போனான் கந்தப்பன். வரதப்பனுக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை- திருட்டுத் தொழிலிலே முதல் பரிசு பெற்றவன் கந்தப்பன். திருடர்கள் உலகிலேயே கந்தப்பனுக்கு ஒரு தனி மதிப்பு, புகழ், செல்வாக்கு உண்டு. அவ்வளவு பிரபலமான திருடன் அவன். அவன் கூறுகிறான் வரதனைப் பார்த்து திருடுவது பெருங்குற்றம் என்று!

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

"பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே — வெளியேறு!"—இந்த வீரமுழக்கம் இன்றையதினம் மலேய பூமியின் ஒவ்வொரு திசையையும் அதிர வைக்கிறது. அந்த நாட்டின் எட்டுத் திசைகளிலிருந்தும் ஏகாதிபத்ய எதிர்ப்புப் பட்டாளங்கள் பிரிட்டிஷ் கொடுங்கோலாட்சியை எதிர்த்து வீரப்போர் புரிந்தபடி இருக்கின்றன.

மறியல், சிறைவாசம், உண்ணாவிரதம், இந்த முறைகள் மூலமாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை வெளியேற்ற முடியாது என்பதை மலாய் மக்கள் தெளிவாக அறிந்துகொண்டிருக்கின்றனர்.

ஆகவேதான் அவர்கள் துப்பாக்கிக்குப் பதில் துப்பாக்கி, வாளுக்குப் பதில் வாள், குத்துக்குப் பதில் குத்து என்கிற போர்முறையைத் தங்களுக்கென்று வடித்துக்கொண்டிருக்கின்றனர். தங்கள் கையிலே கிடைத்த கருவிகளையெல்லாம் கொண்டு ஏகாதிபத்யத்தைத்தாக்குவது என்கிற முடிவுக்கு அவர்கள் வந்திருக்கின்றனர்.

சென்ற ஐந்து ஆண்டுகளாக ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டம் மலேயாவில் மிக முக்கியமாக நடைபெற்றுவருகிறது.

மலேய மக்கள் நடுவிலே சுதந்தர கீதம் உலவத் தொடங்கிவிட்டது என்பதை அறிந்தவுடனே, பிரிட்டன், நாகரிகப் பண்புள்ள நாடாக இருக்குமானால், மலேயாவுக்கு சுதந்தர வாழ்வைக் கொடுத்துவிட்டு மரியாதையாக அந்த நாட்டைவிட்டு வெளியேறியிருக்க வேண்டும்.

ஆனால் பிரிட்டன் அப்படிச் செய்யவில்லை.

மலேயாவுக்கு சுதந்தரநாடு என்கிற அந்தஸ்தை அளிக்கவில்லை.

அப்படிச் செய்வதற்கு மாறாக மலாய் மக்களின் சுதந்தர கீதத்தை ஒடுக்குவதற்காக மட்டரகமான முறைகளையெல்லாம் கையாளத் தொடங்கிவிட்டது பிரிட்டன்.

மலாய் மக்களின் உயிரைத்துச்சமாக மதித்து அவர்களைக் கண்ட இடத்திலே கொன்று குவிப்பது— சுதந்தர முழக்கம் புரியும் மக்கள் மீது ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிவது — விடுதலைப் பரணி பாடுவோர் மீது பிரங்கித் தாக்குதல் நடத்துவது—லைசென்சின்றி யாராவது ஒரு மலாய் வாசி துப்பாக்கி வைத்திருந்தால்போதும், அவனைத் தூக்குமரத்திலேற்றி நிறுத்தி அவன் உயிரைப் பருகுவது—இப்படிப்பட்ட மிகக்கொடிய செயல்களிலெல்லாம் அளவுகடந்த ஆவலுடன் ஈடுபடலாயிற்று பிரிட்டன்.

மலேய மக்களின் விடுதலை முழக்கத்தை ஒழிப்பதற்காகவென்றே 38,000 பிரிட்டிஷ் துருப்புகளை மலேயாவில் இறக்குமதி செய்திருக்கிறது.

பற்பல ஆகாய விமானப் படைகளையும் அந்த நாட்டுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

ஈவு இரக்கமின்றி மக்களைக் கொன்று குவிக்கக் கூடிய இரும்பு இதயம் படைத்த படைத் தளபதிகள் பலரையும் மலேயாவுக்கு அனுப்பியிருக்கிறது.

மலேய மக்களில் நூற்றுக் கணக்கானவர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தால் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

ஆயிரக்கணக்கானவர்கள் கொடுஞ் சிறைக்குள் தள்ளப்பட்டு சாட்டி வதைக்கப்பட்டிருக்கின்றனர்.

இலட்சக்கணக்கானவர்கள் பிரிட்டிஷ் தடியடிக்கு ஆளாகி குருதியைக் கொட்டியிருக்கின்றனர்.

என்றாலும் மலாய் மக்கள் உள்ளம் உடைந்துவிடவில்லை. தங்களுடைய விடுதலைப் போராட்டத்தை விட்டுக்கொடுத்துவிடவுமில்லை.

போர் தொடர்ந்து நடைபெறுகிறது. மேலும் மேலும் உற்சாகத்துடன் நடைபெற்று வருகிறது.

* * *

**டாஞ்சோங் மலீம்** என்பது மலேயாவில் உள்ள ஒரு கிராமம்.

**ஜெனரல் டெம்ப்ளர்** என்பவர் மலேய நாட்டின் எழுச்சி முரசைக் கிழித்தெறிவதற்காக அந்த நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிற உயர்தர பிரிட்டிஷ் அதிகாரி. அவருடைய உத்யோகத்திற்கு பிரிட்டிஷ் ஹை கமிஷனர் என்று பெயர்.

"இதற்கு முன்னாலிருந்த பிரிட்டிஷ் ஹை கமிஷனர்களெல்லாம் வெறும் கோழைகள். அவர்களுக்கு மலேய மக்களை அடக்கத் தெரியவில்லை. இதோ நான் போகிறேன்—மலேய மக்களின் சுதந்தர கீதம் ஒழிந்து போகிறதா இல்லையா பாருங்கள்" என்று சூள் உரைத்துவிட்டு மலேயாவுக்கு வந்தவர் இந்த **டெம்ப்ளர்.**

மலேயாவுக்குள் நுழைந்ததும் நுழையாததுமாக டெம்ப்ளரின் கோபம், **டாஞ்சோங்மலீம்** என்கிற கிராமத்தில் வாழும் இருபத்தையாயிரம் மக்கள் மீது பாய்ந்தது.

அந்த வட்டாரத்தில் யாரோ ஒரு பிரிட்டிஷ் அதிகாரியை யாரோ ஒருவர் கொன்று விட்டாராம்.

கொன்றவர் யார் என்பதைக் கண்டுபிடிக்கத் திறமையில்லை இந்த பிரிட்டிஷ் அதிகாரிக்கு.

அதற்காக என்ன செய்தார் தெரியுமோ இந்த அதிகாரி?

*ஒவ்வொருநாளும் இரண்டுமணி நேரம் மட்டும்தான், டாஞ்சோங் மலீம் கிராமவாசிகள் தங்களுடைய வீட்டை விட்டு வெளியே வரலாம். மற்றபடி, இரவு பகல் எல்லாநேரத்திலும் அவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கவேண்டும்.

* அந்தக் கிராமவாசிகளுக்கு இதுவரை தரப்பட்டுவந்த பங்கீட்டு உணவுப் பொருளில் பாதி அளவு தான் இனி தரப்பட வேண்டும்.

* அந்தக் கிராமத்தில் உள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களையும் மூடிவிடவேண்டும்.

* அந்தக் கிராமத்தில் உள்ள தொழிற்சாலைகள் எதுவும் இனி வேலை செய்யக்கூடாது.

இப்படிப்பட்ட பல கொடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறார் ஜெனரல் டெம்ப்ளர்— அந்தப் பிரிட்டிஷ் அதிகாரி.

யாரோ ஒரு பிரிட்டிஷ் அதிகாரியை யாரோ ஒருவர் கொன்றுவிட்டார் என்ற காரணத்திற்காக ஒரு பாவமும் அறியாத டாஞ்சோங் மலீம் கிராமவாசிகள் இருபத்தையாயிரம் பேருக்கும் இப்படிப்பட்ட கொடுமையான தண்டனைகளை மனம் துணிந்து அளித்திருக்கிறார் ஈவு இரக்கமற்ற டெம்ப்ளர்.

அந்த 25,000 பேரிலே தான் யாராவது ஒருவன் பிரிட்டிஷ் அதிகாரியைக் கொன்றிருக்க வேண்டும் என்று கருதுகிறாராம் டெம்ப்ளர்.

அதற்காகத்தான் இவ்வளவு கொடுமையான தண்டனைகளாம் டாஞ்சோங்மலீம் கிராமவாசிகளுக்கு,

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் கூறுகிறது வெட்கம் மானம் ரோஷம் துளியுமின்றி,

கொலை செய்யப்பட்டவன் ஒருவன் அதற்குத் தண்டனையை அனுபவிக்க வேண்டியவர்கள் 25,000 பேர்!

(7-ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே, வெளியேறு!

★

## மலாய் மக்களின் போராட்டம்

★

### காமன்வெல்த் — ஒரு சிறைச்சாலை.

★

### இந்தியாவுக்கு விடுதலை எப்போது ?

★

இந்தியா
பாகிஸ்தான்
பர்மா
இலங்கை

இந்த நாடுகளெல்லாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் நேரடி ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றுவிட்டன சென்ற ஐந்தாண்டுக் காலத்தில்.

ஆனால் கிழ்த்திசை நாடுகளில் வேறொன்றாகிய மலேயா, இன்னமும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் இரும்புப் பிடியிலேதான் சிக்குண்டு சிதைந்தவண்ணமிருக்கிறது.

மலேயாவிலே ஏராளமான ரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன.

அந்த ரப்பர் தோட்டங்கள் ஒவ்வொன்றும் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான ரூபாய் வருமானத்தை அதன் உரிமையாளர்களுக்கு அளித்து வருகின்றன.

உலகிலேயே வேறு எந்த நாட்டையும்விட ரப்பர் உற்பத்தியில் தலைசிறந்து விளங்கும் நாடு மலேயாதான்.

மலேயாவில் உற்பத்தியாகும் ரப்பர் உலக நாடுகள் ஒவ்வொன்றும் வேண்டி வேண்டி வரவேற்கின்றன. அதனை விலைகொடுத்து வாங்கி உபயோகிக்க உலக நாடுகள் ஒவ்வொன்றும் நான் முந்தி நீ முந்தி என்று போட்டிபோடுகின்றன.

ரப்பர் உற்பத்தி காரணமாக உலக மார்க்கெட்டில், மலேயாவுக்குச் சிறப்பானதோர் இடமும் தனியானதோர் செல்வாக்கும் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்வளவு சிறப்பும் செல்வாக்கும் படைத்த மலாய் நாட்டு ரப்பர் தோட்டங்கள் மலாய் மக்களின் உடைமைகளாக இல்லை.

இந்தத் தோட்டங்களிலே உற்பத்தியாகும் ரப்பர், மலாய் மக்களின் பொக்கிஷத்தை வளமுள்ளதாக்கும் நற்பணி புரியப் பயன்படவில்லை.

இந்தத் தோட்டங்கள் அவ்வளவும் பிரிட்டிஷ் முதலாளிகள் பலரின் தனி உடைமைப் பொருள்களாக இருந்து, அந்த முதலாளிகளின் பணப்பையைப் பலமுள்ளதாக்கவே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரிட்டிஷ் முதலாளிகள் பலர், மலாய் ரப்பர் தோட்டங்கள் அவ்வளவையும் தாங்களே கைப்பற்றிக்கொண்டு, அந்தத் தோட்டங்களைத் தங்கள் மனம்போனபடி சுரண்டிக்கொண்டிருக்கின்றனர்.

இந்தவிதமாகச் சுரண்டப்பட்ட பணம், ஆண்டுதோறும், கோடிக்கணக்கில், மலேயாவிலிருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஒரே வார்த்தையில் சொல்வதானால், பிரிட்டிஷ் முதலாளிகளின் சுரண்டல், தங்கு தடையின்றி நடைபெறுவதற்கு ஏற்ற வேட்டைக் காடாக இருந்துவருகிறது மலேயா.

இந்தச் சுரண்டல் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்று ஆசைப்படுகிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம். எனவேதான், மலேயாவின்மீது தனக்கு உள்ள அரசியல் பிடிப்பைத் தளர்த்த மறுக்கிறது பிரிட்டன்.

மலேயா தன்னுடைய ஆட்சியின்கீழ் இருக்கும் வரையில்தான் தன் நாட்டு முதலாளிகள் அந்த நாட்டைச் சுரண்டமுடியும் என்பது பிரிட்டனுக்கு நன்றாகத் தெரியும்.

மலேயா விடுதலை பெற்று மக்கள் ஆட்சி அங்கே மலரத் தொடங்கிவிட்டால், மலாய் மக்கள், பிரிட்டிஷ் முதலாளிகளை உடனே விரட்டியடித்துவிடுவார்கள் என்பதை பிரிட்டன் தெளிவாகத் தெரிந்துகொண்டிருக்கிறது.

தெரிந்துகொண்டிருக்கிறது — எனவேதான் அது மலேயாவை விட்டு வெளியேற மறுக்கிறது.

இந்தியா—பாகிஸ்தான்—பர்மா இந்த நாடுகளையெல்லாம் விட்டு வெளியேறிவிட்ட பிரிட்டன், மலேயாவை மட்டும் விட்டுவிட மறுக்கிறது என்றால் அதற்குக் காரணம், அந்த நாடுகளிலெல்லாம் இல்லாத அளவுக்கு, சுரண்டல் வசதி, மலேயாவில்தான் இருந்துவருகிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் தங்களுடைய தாய்நாட்டைச் சுரண்டிக் கொழுக்கும் அநியாயத்தைக் கண்டு மலாய் மக்களின் இரத்தம் கொதிக்கிறது, உள்ளம் ஆத்திரத்தைக் கொட்டுகிறது. கண்களிலோ, தீப்பொறி பறக்கிறது. மேற்கொண்டு ஒரு கணமும் விட்டு வைக்கமாட்டோம் இந்த அநியாயத்தை என்று அவர்களுடைய சிங்கக் குரல் இடிமுழக்கம் எழுப்புகிறது.

(௪ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாதன் சிரிக்கிறான்! சிரிக்காமல் எப்படி இருப்பான்?

* * *

"வழக்கறிஞராக இருக்கலாம். இஞ்சினீயராக உலவலாம். வியாபாரியாக வாழலாம். மளிகைக் கடை வைக்கலாம். வேறு எந்தத் தொழில் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் டாக்டர் தொழில்! அந்தத் தொழில் மட்டும் இறங்கிவிடக்கூடாது விஷயம் தெரியாதவர்கள்! ஈவு இரக்கம், மனிதப் பண்பு, ஜீவகாருண்யம், பரிவு பச்சாத்தாபம் இவைகளுக்கெல்லாம் துளியும் இடமில்லாத தொழில் அது! துளியும் இடமில்லாத தொழில்!"—திருவாளர் திகம்பரசாமி இப்படிச் சொற்பொழிவாற்றினார் மக்கள் முன்னேற்றமன்றத்தில்! திரண்டு குழுமியிருந்த மக்களுக்கு ஒன்றுமே புரியவில்லை, திகம்பரசாமியார் இப்படிப் பேசுகிறார் என்று ஆச்சரியத்தால் அசையாச் சிலைகளாகிவிட்டனர் அத்தனை பேரும் இயற்கைதானே! திருவாளர் திகம்பரசாமிபேரும் புகழும் பெற்ற பிரபலமான டாக்டர்! அத்தகையவர் மற்றவர்களைப் பார்த்து டாக்டர் தொழிலுக்கு வாராதீர்கள், அது ஈவு இரக்கமற்ற தொழில், என்று கூறுவாரானால், ஆச்சரியம், மற்றவர்களுக்கு ஏற்படாமலா இருக்கும்?

* * *

"வழக்கறிஞராக வாழ்வதைவிட ஒருவன் கள்ளமார்க்கெட் காதகனாக உலவலாம் வழக்கறிஞன் தொழில் அவ்வளவு பாபகரமானது. தவறானது. பிழைபல மலிந்தது." என்னும் கருத்தை விளக்கி நீண்டதோர் கட்டுரை வெளியாகியிருந்தது வார இதழ் "வெள்ளி வீதி"யில்! "வெள்ளி வீதி"யைப் படிக்க நேர்ந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் சிரிப்பு ஒரு புறம்—வியப்பு, மற்றோர் புறம்! ஏனெனில் அந்தக் கட்டுரையைத் தீட்டியிருப்பவரின் பெயர் வழக்கறிஞர் வரதராஜ அய்யங்கார் எம். ஏ. பி. எல். சிரிப்பும் வியப்பும் தோன்றாமலா இருக்கும் வாசகர்களுக்கு?

* * *

ஓயாமல் பிச்சையெடுக்கும் நாராயணன் மற்றவர்களைப் பார்த்து பிச்சையெடுப்பது மகா பாவம் என்று கூறுகிறான்!

திருட்டுக் கலையிலே தனித்திறமை வாய்ந்த கந்தப்பன், திருடுவது கூடாது ஆகாது அடாது என்று உபதேசம் புரிகிறான் ஊராரைப் பார்த்து!

பிரபல டாக்டராக ஜொலிக்கும் திகம்பரசாமி, செச்சே! டாக்டர் தொழிலா! மகா கேவலம்! யாரும் இந்தத் தொழிலை மேற்கொள்ளாதீர்கள் என்று உள்ளன்புடன் கூறுகிறார் கூடியிருக்கிற மக்களைப் பார்த்து.

வக்கீல் தொழிலிலே மாதம் ஆயிரம் இரண்டாயிரம் என்று பணம் திரட்டும் போராற்றல் படைத்த வரதராஜ அய்யங்கார் அந்தத் தொழிலிலே நுழையாதீர்கள் அது மிக மிக அநீதி நிரம்பிய தொழில் என்று ஏனைய மக்களுக்கெல்லாம் எழில்பட எடுத்துக் கூறுகிறார்.

இவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களுடைய தொழிலை உதறித் தள்ளிவிட்டு அதற்கு அப்புறம், "அந்தந்தத் தொழில் மிகவும் அக்கிரமமானது—ஆகவே அந்தத் தொழில்களை யாரும் மேற்கொள்ளாதீர்கள்" என்று கூறியிருப்பார்களானால் அப்படிக் கூறுவதிலே, நாணயம் இருந்திருக்கும். ஆனால் இவர்களோ தத்தமது தொழிலை விடாமல் புரிந்து கொண்டே, அந்தத் தொழில் மகா பாவமானது!—ஆகவே யாரும் அந்தத் தொழிலை மேற்கொள்ளாதீர்கள்!" என்று ஊருக்கு உபதேசம் புரியும் உத்தமர்களாகக் காட்சி அளிக்கிறார்கள்.

நாணயம் இல்லாதவர்கள்.

பித்தலாட்டக்காரர்கள்.

உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசும் உலுத்தர்கள்.

ஊருக்கு உபதேசிகள்.

தனக்கொரு நியாயம், பிறருக்கொரு நியாயம் பேசும் அக்கிரமக்காரர்கள்.

இந்த வாசகங்களிலே எதை வேண்டுமானாலும் கூறலாம் இவர்கள் சம்பந்தமாக.

எதைக் கூறினாலும் இவர்களுக்குப் பொருத்தமாகத்தான் இருக்கும்.

சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகக் கொலுவீற்றிருக்கிறாரல்லவா பூசுரர் தலைவர் ஆச்சாரியார், அவர், இந்தத் திங்கள் பத்தாம் நாள், சென்னையில், தன் முத்தான வாய் திறந்து ஒரு மோகனமயமான சொற்பொழிவை ஆற்றியிருக்கிறார். அந்தச் சொற்பொழிவை நாளிதழ்களில் கண்டதும் நமக்கு,

**பிச்சைத் தொழில் நாராயணன்,**
**கன்னக்கோல் கந்தப்பன்,**
**பிரபல டாக்டர் திகம்பரசாமி**
**வழக்கறிஞர் வரதராஜ அய்யங்கார்**

ஆகிய இவர்களின் நினைவுதான் மேலோங்கி எழும்பலாயிற்று.

போரா வகுப்பு என்பது இஸ்லாமிய சமுதாயத்தில் உள்ள பல்வேறு உட்பிரிவுகளில் ஒன்று. அந்தப் போரா வகுப்பைச் சேர்ந்த மக்கள் சென்னை நகரில் மட்டும் சுமார் ஆயிரத்து இருநூறுபேர் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் பெரும்பாலும் வணிகர்கள். அவர்க

ளிலே பல சிறந்த வழக்கறிஞர்கள் டாக்டர்கள் தொழில் நிபுணர்கள் ஆகியோரும் இருக்கின்றனர். போரா சமுதாயத்தவர்கள் அத்தனைபேரும் ஆழ்ந்த மதப்பற்று உடையவாகள். அரசியல் துறையிலே பெரும்பாலும் அவர்கள் ஈடுபடுவதில்லை.

இப்படிப்பட்ட நிலையும் நினைப்பும் படைத்த போரா சமுதாயத்தவர்கள், இம் மாதம் பத்தாம் தேதியன்று, அவர்களுடைய குலகுருவுக்கு, சென்னையில் ஒரு தேநீர் விருந்தை அளித்திருக்கிறார்கள். அந்தத் தேநீர் விருந்திலே அன்பர் ஆச்சாரியாரும் கலந்துகொண்டு விருந்தை அருந்திய பிறகு விரிவுரை ஒன்றும் ஆற்றியிருக்கிறா. அந்த விரிவுரையைக் கண்டபோதுதான் நம் மனக் கண்முன்னால் கன்னக்கோல் கந்தப்பனும் வக்கீல் தொழில் வரதராஜ அய்யங்காரும் பிச்சையெடுக்கும் நாராயணசாமியும் பிரபல டாக்டர் திகம்பர சாமியும் தோன்றலாயினர்.

"போரா வகுப்பைச் சேர்ந்த நீங்கள் பிரபல வணிகர்களாக இருந்து வருகிறீர்கள். நீங்கள் உங்களுடைய வாணிபத்தைத் தொடர்ந்து நடத்தி வரவேண்டுமென்பதே என்னுடைய ஆசை. நீங்கள், அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டாம். அது உங்களுக்கு அவசியமில்லை."

ஆச்சாரியார், இதுபோல, அறிவுரை கூறியிருக்கிறார் போரா வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு.

தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அரசியலிலேயே கழித்துவிட்டவர் ஆச்சாரியார். வயது எழுபதுக்குமேல் ஓடியும் கூட அரசியலை விட்டுத் துறக்க மனமில்லாமல் அரசியல் வட்டாரத்துக்குள்ளேயே வளைய வளைய வந்துகொண்டிருப்பவர் ஆச்சாரியார். கவர்னர் ஜெனரல் என்கிற மிக உயர்ந்த உத்யோகத்தில் இருந்தவர்கள் அப்படி இருந்தபிறகு எத்தகைய அரசியலிலும் நுழையக்கூடாது என்கிற அரசியல் சம்பிரதாயத்தையும் மீறி வேண்டுமென்றே அரசியலில் மீண்டும் நுழைந்து சித்துகள் பலவற்றை விளையாடி வரும் விசித்திரபுருஷர் ஆச்சாரியார். ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளாகத் தன்னுடைய உள்ளத்தை, உணர்ச்சிகளை, அறிவை, திறமையை, அத்தனையையும் அரசியல் உலகுக்கே அர்ப்பணித்துவிட்டவர் ஆச்சாரியார். அரசியல் உலகில் நெடுங்காலமாகப் பவனி வந்துகொண்டிருப்பவர் மட்டுமல்லர் அவர், அரசியல் உலகில் உலவுவதால் என்னென்ன ருசியையும் பசையையும் காண இயலுமோ அவ்வளவையும் அனுபவித்து முதிர்ந்த அரசியல் பழம், ஆச்சாரியார். வெள்ளை ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டக் காலத்தில், பூமாலை—பாராட்டு—புகழ் — செல்வாக்கு இவ்வளவும் கிடைத்தன அவருக்கு. சுயராஜ்ய தர்பார் நடைபெற்று வரும் இந்தக் காலத்திலோ, மத்திய சர்க்காரில் இரண்டு முறை மந்திரிப்பதவி, வங்காள மாகாணத்தில் ஒருமுறை கவர்னர் பதவி, அகில இந்தியாவுக்கும் ஒரு முறை கவர்னர் ஜெனரல் பதவி, கடைசியாக இப்போது சென்னை மாகாணத்தின் முதலமைச்சர் பதவி ஆகிய இவ்வளவு இலாபங்களும் கிடைத்திருக்கின்றன அன்பர் ஆச்சாரியாருக்கு.

பட்டம்
பதவி
புகழ்
பணம்

வசதிகள் நிரம்பிய வாழ்க்கை ஆகிய இவைகளிலே ஏதாவது ஒன்றையோ, அல்லது சிலவற்றைமட்டுமோ அல்லது எல்லாவற்றையுமோ பெறவேண்டுமென்பதுதான் எந்த மனிதனுக்கும் ஏற்படக்கூடிய மிக அதிகப்படியான ஆசையாக இருக்கமுடியும். ஆச்சாரியார், இவை அத்தனையையும் பெற்றிருக்கிறார் அவர் நம் அரசியல் வாதியாக இருந்துவரும் காரணத்தால்.

சென்ற நாற்பது ஆண்டுகளாக அரசியலிலே ஈடுபட்டு, அப்படி ஈடுபட்ட காரணத்தால் பெயரும் புகழும் பட்டமும் பதவியும் வேண்டியமட்டும் பெற்று அநுபவித்த ஆச்சாரியார், மற்ற மனிதர்களைப் பார்த்து, அரசியலில் ஈடுபடாதீர்கள் — அது தேவையில்லாத காரியம் என்று கூறுகிறார்.

இது நாணயமான பேச்சாக இருக்க முடியுமா?

துள்ளியோடும் புள்ளிமான்களை வேட்டையாடிக் கொன்று தின்றுவிட்டு, புலி, ஜீவகாருண்யம் பேசினால் அந்தப் பேச்சை நேர்மையுள்ள பேச்சாக எடுத்துக்கொள்ள முடியுமா நாம்?

அரசியல் என்பது உண்மையிலேயே நாட்டுக்குத் தேவையில்லாத ஒரு துறை என்பது ஆச்சாரியாரின் எண்ணமாக இருக்குமானால் அவர் ஏன் இன்னமும் அரசியல் உலகிலேயே உழன்றுகொண்டிருக்கிறார்?

அவர் அரசியல் உலகிலிருந்து வெளியேறிவிட்டு, அரசியல் துறைக்கே ஒரு கடைசி விடை கொடுத்துவிட்டு, அதற்கு அப்புறம், அரசியல் என்பது தேவையற்ற ஒரு காரியம் என்று பேசுவாரானால், அந்தப் பேச்சிலே நாணயம் இருக்க முடியும்.

([illegible]ம் பக்கம் பார்க்க)

வேண்டியது இந்திய சர்க்காரின் தலையாய கடமை.

அந்தக் கடமையை இதுவரை நிறைவேற்றியிருக்கிறார்களா இந்திய ஆட்சியாளர்கள்?

கிடையாது.

மலேயா நாட்டு சுதந்தரப்போராட்டத்தை ஆதரித்துத் தங்களுடைய சுட்டுவிரலையும் அசைக்கவில்லை மத்திய சர்க்கார்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கொடுங்கோன்மையை எதிர்த்துச் சின்னஞ் சிறியதோர் புரட்சிக் கொடியைக் கூட உயர்த்தவில்லை ஜவஹர் ஆட்சி.

* * *

பிரிட்டிஷ் காமன் வெல்த் என்பது பிரிட்டனைத் தன் தலைமை நாடாகவும், பிரிட்டிஷ் மன்னரைத் தன் தலைமை அதிகாரியாகவும் கொண்டிருக்கும் ஓர் அமைப்பு.

இந்த அமைப்பு, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் பலத்தையும் செல்வாக்கையும் போற்றிப் பாதுகாப்பதற்காகத்தான் பிரிட்டிஷ் ராஜதந்திரத்தால் உருவாக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டு வருகிறது.

தென்னாப்ரிக்கா
கனடா
பாகிஸ்தான்
இலங்கை
ஆஸ்திரேலியா

ஆகிய பல நாடுகள் இந்த அமைப்பிலே இணைந்து நிற்கின்றன.

இந்த அமைப்பின் தலைமைப் பீடத்தில் உள்ள பிரிட்டன், மலேய மக்களுக்கும், அந்த மக்களில் ஒரு குறிப்பிடத் தக்க அளவு எண்ணிக்கை உடையவர்களாக இருக்கும் இந்தியர்களுக்கும் இழைத்து வரும் அநீதி எத்தன்மையது என்பதை நாம் ஏற்கெனவே எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

இந்த அமைப்பிலே ஓர் உறுப்பினராகக் காட்சி தரும் தென்னாப்பிரிக்கா, அந்த நாட்டில் வாழும் இந்தியர்களை எப்படிப் புழுவினும் கேடாய் மதித்து சித்திரவதை செய்து வருகிறது என்பதை அனைவரும் அறிவர். வெள்ளையர்கள் வாழும் பகுதிகளில் இந்தியர்கள் வசிக்கக்கூடாது என்றும், சேரிகளில் ஆதித்திராவிடர்கள் வதைவது போலவே, தென்னாப்பிரிக்க இந்தியர்கள் வெள்ளையர்களைவிட்டு ஒதுங்கி தனி இடங்களில் வாழ வேண்டும் என்றும் தென்னாப்ரிக்க முதலமைச்சர் டாக்டர் மலான் சட்டம் இயற்றி இருப்பது உலகம் அறிந்த செய்தி. வெள்ளையர்கள் மேலான மக்கள், இந்தியர்கள் கீழான சாதியினர் என்ற நிறவெறி அங்கே வாழ்க்கையின் துறைதோறும் தாண்டவமாடும்படி செய்யப்பட்டுவிட்டது அந்த நாட்டு மலான் சர்க்காரால்.

பிரிட்டிஷ் காமன்வெல்த்திலே மற்றோர் உறுப்பினராகத் திகழும் இலங்கை, அந்த நாட்டில் வாழும் எட்டு இலட்சம் இந்தியர்களில் எட்டாயிரம் பேரைத் தவிர ஏனையோருக்கெல்லாம் ஓட்டுரிமையைக் கூட அளிக்க மறுக்கும் அநீதியை நாம் சொல்லித் தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற நிலையில் இல்லை வாசகர்கள்.

பிரிட்டிஷ் காமன்வெல்த் என்கிற அமைப்பின் தலைமைப் பீடத்தில் வீற்றிருக்கும் பிரிட்டனோ தென்னாப்ரிக்க அநீதியையும் இலங்கைக் கொடுமையையும் எதிர்த்து இன்றளவும் ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை.

தலைமைப் பீடத்தில் வீற்றிருக்கும் பிரிட்டனோ நம்மை அலட்சியம் செய்கிறது.

உறுப்பினர்களாகக் காட்சிதரும் இலங்கை, தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளோ நமக்குக் கொடுமைகள் இழைக்கின்றன.

இப்படிப்பட்ட நிலைமையிலிருக்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இந்தியாவையும் ஓர் உறுப்பினராகச் சேர்த்திருக்கிறார் பண்டித நேரு.

இலங்கைக் கொடுமை
தென்னாப்ரிக்க அநீதி
மலேயாவில் நடத்தப்படும் பிரிட்டிஷ் வெறியாட்டம்

இந்த மூன்று சோகத் தொடர் கதைகளைக் கூர்ந்து கவனிக்கும் எவரும் பண்டிதரின் செயலை நியாயமானது என்று கூறமாட்டார்கள்.

காமன்வெல்த் என்பது இந்தியாவின் சுயமரியாதையையும் கவுரவத்தையும் செல்வாக்கையும் அழிக்கும் ஒரு சிறைச்சாலை. அந்தச் சிறையிலே ஏன் இந்தியா இன்னமும் சிக்கிச் சீரழிய வேண்டும்?

**திராவிட முன்னேற்றக் கழகம்** இந்தக் கேள்வியைத் தான் கேட்கிறது.

இந்தியர்களுக்குச் சொல்லொணாத அநீதியை இழைத்துவரும் தென்னாப்பிரிக்கா, இலங்கை, பிரிட்டன் ஆகிய நாடுகளைக் கொண்ட காமன்வெல்த்தில் இந்தியா இனி ஒரு கணநேரம் கூட இருக்கக் கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகம் பலமுறை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இந்தத் தீர்மானம் நியாயமானது என்பதை யார் மறுக்க முடியும்?

மலேயாவைப் பாருங்கள். இலங்கையைக் கவனியுங்கள். தென்னாப்பிரிக்காவை எண்ணுங்கள். பிரிட்டனையும் நோக்குங்கள். பிறகு சொல்லுங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தீர்மானம் நியாயமானதுதானா, அல்லவா?

---


## எல்லாம்

# புதிய புத்தகங்கள்

**பிளாட்டோ**
அரசியல் அறிஞன் பிளேட்டோவின் வரலாறும் தத்துவங்களும் 1 0

**எழிலரசி கிளியோபாட்ரா**
நெஞ்சை அள்ளும் கருத்தோவியம் 1 0

**மாஜிகடவுள்கள்**
குடும்பம் குடும்பமாக உள்ள கடவுள்களின் கதி என்ன என்பது விளக்கப்படுகிறது 0 8

**சுழல்விளக்கு**
(மு. கருணாநிதியின் கருத்துக் குவியல்) 1 0

**துடிக்கும் இளமை**
(மு. கருணாநிதி) இரண்டாம் பதிப்பு 0 6

**பசி** (இராதாமணாளன்) 1 0
இரண்டாம் பதிப்பு

**சபதம்** (இராதாமணாளன்) 1 0

**வெறுங் கூடு** 1 0
(ஆசைத்தம்பி)

**கருணாநிதி கருத்துரைகள்** 0 3

**பகுத்தறிவுப் பாசறை**
131, பிராட்வே, சென்னை.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டுமிராண்டிகளிடையே கூட இப்படிப்பட்ட அக்கிரமும் ஆணவப் போக்கும் இருக்க மாட்டா.

ஹிட்லரும் முசோலினியும் கூட இப்படிப்பட்ட கொடுமைகளைத் துணிந்து புரிந்தது கிடையாது.

ஆனால் டெம்ப்ளர், ஒரு பிரிட்டிஷ் அதிகாரி, 25,000 மக்களைப் பழி வாங்குகிறார் ஒரு பிரிட்டிஷ் அதிகாரியின் உயிர் பறிபோனதற்காக.

அந்த அதிகாரியின் ஆணவப் போக்கை முழு மனதுடன் ஆதரிக்கிறது பிரிட்டிஷ் ஆட்சிப் பீடம்.

ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்—டெம்ப்ளரின் உத்தரவுகள் எவ்வளவு கொடுமையானவை!

டாஞ்சோங் மலீம் கிராமவாசிகளின் மிகப் பெரும்பாலோர் தொழிலாளிகள். அவர்களும் மாத சம்பளம் பெறுகிற தொழிலாளிகள் அல்ல. தினக்கூலி பெறுகிற தொழிலாளர்கள் அன்றன்றுடம் தொழிற்சாலைக்குச் சென்று உழைத்தால் தான் அன்றன்றுட கூலி கிடைக்கும் அவர்களுக்கு. அந்தக் கூலி கிடைத்தால் தான் அடுத்த நாள் வாழ்க்கையை நடத்த முடியும் அவர்களால்.

இப்படிப்பட்ட நிலையிலிருக்கும் தொழிலாளர்களைத் தான் வீட்டை விட்டு வெளியேகிளம்பாதே என்று உத்தரவு போட்டுத் தடுத்துவிட்டார் பிரிட்டிஷ் அதிகாரி ஜெனரல் டெம்ப்ளர்.

அவர்கள் வீட்டை விட்டு வெளியே கிளம்பாவிட்டால் அவர்கள் வீட்டு அடுப்பு அடுத்த நாள் புகையாது.

பசியும் பட்டினியும் தான் அவர்கள் வீட்டைச் சூழ்ந்து, மனைவி மக்களைச் சித்திரவதை செய்யும் இந்த நிலையில்.

இவை யெல்லாம் தெரியாதா டெம்ப்ளருக்கு?

தெரியும். தெரிந்து தான் போட்டிருக்கிறார் "வெளியே போகாதே" உத்தரவை.

அந்த இருபத்தையாயிரம் கிராமவாசிகளும் பட்டினி கிடக்க வேண்டும். உண்ண உணவின்றிச் சோறே சோறு என்று அலைய வேண்டும். உயிர் உடலை விட்டு வெளியேறும் நிலையில் ஊசலாட வேண்டும். ஐயையோ என்கிற அவலக்குரல் அந்தக் கிராமவாசிகள் ஒவ்வொருவரிடமிருந்தும் புறப்பட வேண்டும். இது தான் ஜெனரல் டெம்ப்ளரின் ஆசை.

பசியும் பட்டினியும் அவர்களைச் சித்திரவதை செய்தால்தான் அவர்கள் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள் என்பது டெம்ப்ளரின் சித்தாந்தம்.

இந்தச் சித்தாந்தத்தை நடைமுறைக் கீதமாக ஆக்குவதற்காகத் தான், டெம்ப்ளர், வீட்டைவிட்டு வெளியேறாதே என்கிற உத்தரவைப் போட்டார். தொழிற்சாலைகளையெல்லாம் இழுத்துப் பூட்டும்படி கட்டளையிட்டார். ஊர் மக்களுக்கு வழங்குகிற பங்கீட்டு உணவை ஒன்றுக்குப் பாதியாகக் குறைக்கும்படி தாக்கீது பிறப்பித்தார்.

கிளர்ச்சி செய்யும் மக்களை அடக்கவேண்டுமானால் அதற்குரிய சிறந்த வழி அந்த மக்களைப் பட்டினி போடுவதுதான் என்பது ஹிட்லருடைய கோட்பாடு.

அந்த ஆணவம் நிரம்பிய கோட்பாட்டைத்தான் அப் பழுக்கின்றிப் பின்பற்றுகிறார், பிரிட்டிஷ் ஹிட்லர், டெம்ப்ளர்.

ஒரு நாளுக்கு இருப்பவை மொத்தம் 24-மணிகள்.

ஜெனரல் டெம்ப்ளரோ 22-மணி நேரம் வெளியே வராதே என்று உத்தரவு போடுகிறார்.

அக்கிரமம் இதைவிட வேறென்ன இருக்கமுடியும்?

* * *

**பேராங்** என்பது மலேயாவில் உள்ள ஒரு கிராமம்.

அந்தக் கிராமத்தின்மீதும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளின்மீதும் சிலவகையான ரசாயனத் தூள்களைத் தூவியிருக்கின்றனர் பிரிட்டிஷ் அதிகாரிகள்.

நடந்துசென்று அல்ல, ஆகாய விமானத்தின் மூலமாகத்தான் தூவப்பட்டன ரசாயனத் தூள்கள், அந்தத் தூள்கள் தூவப்பட்ட பகுதிகளில் செழித்து வளர்ந்திருந்த உணவுப் பயிர்கள் எல்லாவற்றையும் அடியோடு அழித்து ஒழித்துவிட்டன.

அந்தக் கிராமத்திலேயும் அந்தக் கிராமத்திற்கு அருகே உள்ள காடுகளிலேயும் தலைமறைவாக இருந்து கொண்டு விடுதலைப் போராட்டத்தை நடத்தி வருகின்றனராம் சில மலாய் மக்கள்.

அந்த விடுதலை வீரர்களுக்குத் தேவையான அளவு உணவு அந்தக் கிராமத்து வயல்களிலிருந்து கிடைத்துவிடுகின்றனவாம்.

அந்தக் கிளர்ச்சிக்காரர்களைச் சரணாகதி அடையும்படி செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு உணவு கிடைக்காதபடி செய்ய வேண்டுமாம்.

அவர்களுக்கு உணவுகிடைக்காதபடி செய்யவேண்டுமானால், அந்த வட்டாரத்தில் உள்ள உணவுப் பயிர்கள் எல்லாவற்றையும் அழித்தாக வேண்டுமாம்.

ஆகவேதான் ஆகாய விமானத்தின்மூலமாக ரசாயனத் தூள்களைத் தூவி உணவுப் பயிர்கள் அவ்வளவையும் அழித்துவிட்டார்களாம் பிரிட்டிஷ் அதிகாரிகள்.

எப்படி இருக்கிறது கதை?

தலைமறைவாக இருக்கிற ஒரு சில விடுதலை வீரர்களைப் பணிய வைப்பதற்காக ஒரு கிராமப் பகுதியில் உள்ள உணவுப் பயிர்கள் அவ்வளவையும் நாசமாக்குகிறது பிரிட்டிஷ் ஏகாதிபத்யம்!

அக்கிரமம் அக்கிரமம் என்று கூறுகிறது உலகம்.

இல்லை—இப்படியெல்லாம் செய்வதுதான் நியாயம், நியாயம், என்று பறைசாற்றுகிறது பிரிட்டன்.

* * *

சீனர்கள், சாகாய் வகுப்பினர், மலாய் மக்கள், இந்தியர்கள், சைமிகள், இந்தோனீஷ்ய பரம்பரையினர் ஆகிய அறுவகை தேசிய இனத்தவர்கள் மலாய் நாட்டில் வாழ்ந்துவருகின்றனர்.

மலாய் மக்கள் மீது பிரிட்டன் நடத்திவரும் ஒவ்வொரு அடக்குமுறையும் அங்கே வாழும் இந்தியர்கள்மீதும்தான் பாய்கிறது—இதை நாம் மறந்துவிடக் கூடாது.

மலாய் மக்கள் மீது பிரிட்டன் எவ்வளவு கொடுமையைக் கொட்டினால்தான் நமக்கென்ன என்று நாம் இருந்துவிட முடியாது. அங்கே வாழும் இந்தியர்கள்படுகிறவேதனையைத் தீர்க்கவேண்டிய கடமை நமக்கு உண்டு நாம் இந்திய நாட்டவர்கள் என்கிற காரணத்தால்.

பொதுவாக மலாய் மக்களும், குறிப்பாக அங்கே வாழும் இந்தியர்களும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் இரும்புப் பிடியில் சிக்குண்டு தவிக்கும் கொடுமையை ஒழிக்க முன்வர

(6-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 24—5—52 சனிக்கிழமை


# ஒழியத்தான் வேண்டும் மேல் சபைகள்!

"பாமர மனிதர்கள் பாராளும் காலம் இது" என்றார் புரட்சிக் கவிஞர் இக்பால். அவர் கூறிய வாசகம் முற்றிலும் உண்மை. பாமர மனிதர்கள் பாராளும் காலம்தான் இது. உலகத்தின் பற்பல பகுதிகளிலும் மணிமகுடங்கள் சாய்ந்து, மன்னராட்சி தொலைந்து, மக்கள் ஆட்சி மலர்கிற சகாப்தம் இது. மக்களுக்காக மக்களால் நடத்தப்படுகிற மக்கள் ஆட்சியே நல்லாட்சி என்கிற ஆப்ரகாம் லிங்கலின் வாசகம் அகில உலகிலும் எதிரொலிக்கிற காலம் இது.

ஆனால் ஒரு காலம் இருந்தது, ஒவ்வொரு நாட்டிலேயும் மன்னன் என்றோர் மனிதன் இருந்துகொண்டு அந்த நாட்டையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த காலம். அந்தக் காலத்தில் மன்னன் இட்டதுதான் சட்டம், நினைத்ததுதான் கட்டளை. எல்லா அரசியல் அதிகாரங்களும் மன்னனிடம்தான் குவித்துவைக்கப்பட்டிருந்தன அந்தக் காலத்தில். அவனேதான் சட்டசபை. அவனேதான் நீதிமன்றம். அவனேதான் சேனைத் தலைவன். அவனேதான் பிரதம மந்திரி. இந்த நிலை இருந்து வந்தது உலக வரலாற்றில நீண்ட காலம்.

பிறகோர் காலம் வந்தது. அந்தக் காலத்தில், ஜமீன் ஜாம்பவான்கள் மிட்டா மிராசுதாரர்கள், நீண்ட செல்வாக்குப் படைத்தவர்கள், ஏராளமான பணபலம் மிகுந்தவர்கள், என்று உள்ளவர்களெல்லாம், நாட்டை ஆளும் உரிமையிலேயே தங்களுக்கும் ஏன் பங்கிருக்கக்கூடாது என்று எண்ணப்படலானார்கள். அவர்கள் செல்வாக்கு மிகுந்தவர்கள். அந்தஸ்தில் உயர்ந்தவர்கள். சிலபல சமயங்களில் மன்னனையே கூட தங்கள் மனம்போனபடி ஆட்டிப்படைக்கக்கூடிய அளவுக்கு அவர்களிடத்திலே பலம் குவிந்துகிடந்தது. எனவே அவர்களுடைய வேண்டுகோளை அலட்சியம செய்யமுடியவில்லை மன்னனால், ஆளும் உரிமையின் ஒரு பகுதியை அவர்களுக்கு அளித்து விட்டான். ஆம்! முதல் சட்டசபை பிறந்தது உலக வரலாற்றில்.

சீமான்கள் சட்டசபையிலே கொலுவீற்றிருந்தனர். மன்னன் சிம்மாதனத்திலே கொலு வீற்றிருந்தான். பொதுமக்கள் இந்த இருசாராருக்கும் குற்றேவல் புரிந்து கொண்டிருந்தனர். இத்தவிதமாக ஆட்சிமுறை நடைபெற்றுக்கொண்டிருந்தது பல நூற்றாண்டுகள்.

பிறகோர் காலம் வந்தது.

அந்தக் காலத்தில்; பொதுமக்கள், ஆளும் உரிமையிலே ஒரு பகுதி நமக்கும் இருக்கவேண்டாமா என்று கேட்கத் தொடங்கினர்.

முதலிலே அவர்களுடைய குரல் மிகவும் மெதுவானதாகத்தான் இருந்தது. ஆனால் நாளாக ஆக அந்தக் குரல் மேலும் பலமடைந்து கடைசியில் ஓர் நாள் சட்டசபையிலே எங்களுக்கும் இடம் கொடுத்துத்தான் ஆகவேண்டும் என்று வீரமுழக்கமிடுகிற அளவுக்கு வளர்ந்துவிட்டது.

சீமான்கள் முதலில் அவர்களுடைய கோரிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்தனர். உங்களுக்கா? சட்டசபையிலா? இடமா? அதுதான் கிடையாது என்று ஆணவக் குரலில் பேசினர். பேசினரா? இல்லை! கர்ஜனை புரிந்தனர்.

ஆனால் மக்கள் மன்றத்தின் புரட்சிக்குரல் வலுக்க வலுக்க சீமான்கள் குரலிலே காணப்பட்ட உறுதி தளர்ந்தது. கடைசியில் ஓர் நாள் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடம் கொடுத்தேயாக வேண்டும சட்டசபையில் என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனால் அப்போதும், சீமான்கள், மக்களின் பிரதிநிதிகளைத் தங்களுக்குச் சரிநிகர் சமானமாக உட்காரவைக்க மறுத்தனர். சீமான்களாகிய நாம் உட்காருவது ஓர் இடத்திலே—சாமான்யர்களாகிய இவர்களும் உட்காருவதா அதே இடத்திலே—கூடாது—ஆகாது என்று தெரிவித்துவிட்டனர் சீமான்கள், சட்டசபைகள் இரண்டு இடங்களிலே நடைபெறட்டும்—ஒன்றிலே, நாம் சீமான்கள் இருப்போம, மற்றொன்றிலே, அவர்கள், சாமான்யர்கள் இருக்கட்டும்என்று சீமான்கள் ஒரு புதுவித ஏற்பாட்டைச் செய்தனர்.

தாங்களெல்லாம் சீமான்கள்—மேலானவர்கள் ஆகவே தங்களுடைய சட்டசபை **மேல்சபை** என்றும், மக்களின் பிரதிநிதிகளெல்லாம் பாமரர்கள் — கீழானவர்கள் —ஆகவே அவர்களுடைய சட்டசபை **கீழ்சபை** என்றும விளக்கம் தெரிவித்தனர் சீமான்கள்.

ஆரம்பகாலத்தில் எல்லா அரசியல் அதிகாரங்களும் சீமான்களின் சபையாகிய மேல்சபையிடமே இருந்து வந்தன. கீழ்சபை என்பது பெயரளவுக்குத்தான் இருந்து வந்தது.

ஆனால் காலம் செல்லச் செல்ல, அதிகாரங்கள், கொஞ்சம் கொஞ்சமாக மேல் சபையிடமிருந்து கீழ்சபைக்கு மாறிக்கொண்டேவந்து, இன்றைய தினம், எல்லா அதிகாரங்களும் கீழ்சபைக்குத்தான் என்கிற நிலை ஏற்பட்டுவிட்டது.

([illegible] பக்கம் பார்க்க)

# இரண்டு உலகங்கள்!

சமீபகாலப் பத்திரிகைகளிலே இரண்டு செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

## 1

"பம்பாய் நகருக்கு விஜயம் செய்துள்ள ஹைதராபாத் நைஜாம் அங்கு சப்ளையாகும் தண்ணீரைப் பருக மாட்டார். அவருக்காக ஹைதராபாத்திலிருந்து தினந்தோறும் விமானம் மூலம் ஜலம் அனுப்பப்படும். ஹைதராபாத்தில் கூட சாதாரணக் குழாய் ஜலத்தை இவர் பருகுவதில்லையாம். மீர் அலாம் என்கிற குலத்திலிருந்து வடிகட்டிவரும் ஜலத்தையேதான் இவர் உட்கொள்வது வழக்கமாம். சமீபத்தில் இவர் டில்லிக்குச் சென்றிருந்த போதுகூட, ஐதராபாத்திலிருந்துதான் குடிநீர் இவருக்கு விமானம் மூலம் அனுப்பப்பட்டு வந்ததாம்!"

## 2

"இராயலசீமை என்கிற ஆந்திர நாட்டின் பகுதியில் குடிக்கவும் தண்ணீர் கிடைக்காமல் மக்கள் திண்டாடுகின்றனர். ஒரு குடம் தண்ணீருக்காகச் சில இடங்களில் இரண்டு மைல் மூன்று மைல் தூரம் ஏழை மக்கள் கடும் வெய்யிலில் நடந்து சென்று தவிக்க வேண்டியிருக்கிறது. சின்னஞ் சிறு குழந்தைகளும், வயதான பெரியவர்களும், தண்டுன்றும் தாய்மார்களும் தகிக்கும் வெயிலில் கால்நடையாக நடந்துசென்று தண்ணீர் கிடைக்கும் இடத்தைத் தேடி அலைவது மிகவும் பரிதாபமான காட்சியாக இருக்கிறது."

இப்படி இரண்டு செய்திகள் வெளிவந்திருக்கின்றன பத்திரிகைகளில்.

ஒருவருக்கு அவர் இருக்கும் இடத்தைத் தேடித் தண்ணீர் பறந்துவருகிறது. விமானம் மூலமாக.

வேறு சிலருக்கோ அவர்கள் தேடித் தேடி அலைந்தாலும் தண்ணீர் கிடைப்பதில்லை—தாகமோ தாகம் என்று அவர்கள் துடியாய்த் துடிக்கின்றனர்.

ஒருவருக்கு அவர் இருக்கும் ஊரிலே கிடைக்கும் தண்ணீராகக் குடிக்கவும் மனம் ஒப்பவில்லை. நெடுந்தொலைவுக்கு அப்பாலிருந்து ஆகாய விமான மூலமாகத் தண்ணீரை வரவழைக்கிறார்.

வேறு சிலருக்கோ எந்த ஊர்த் தண்ணீராயிருந்தாலும் சரி, எப்படிப்பட்ட தண்ணீராயிருந்தாலும் கூடச் சரி, குடிப்பதற்கு ஒரு முழுங்கு தண்ணீர் கிடைத்தால் போதும் என்கிற நிலை ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

ஹைதராபாத் தண்ணீர்தான் குடிப்பேன் என்றார் ஒருவர்.

குடிப்பதற்குத் தண்ணீரே இல்லையே அந்தோ, என் செய்வோம் என்கின்றனர் வேறுசிலர்.

அவரும் இந்தியர்தான்.

இவர்களும் இந்தியர்கள்தான்.

அவரும் மனிதர்தான்.

இவர்களும் மனிதர்கள்தான்.

பிறப்பு, வளர்ப்பு, மரணம் ஆகிய மூன்று நிலைகள் அவருக்கும் தான் உண்டு, இவர்களுக்கும்தான் உண்டு.

அவரும் ஒரு மாதாவின் வயிற்றிலே பிறந்த மகவுதான்.

இவர்களும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதாவின் வயிற்றிலே பிறந்தவர்கள்தான்.

என்றாலும் அவருக்குத் தண்ணீர் பறந்து வருகிறது ஆகாய விமானம் மூலமாக.

இவர்களோ தண்ணீருக்காகப் பறக்க வேண்டியிருக்கிறது நாலா திசைகளையும் நோக்கி.

இரு சாராரும் மனிதர்கள்தான்—என்றாலும் இவ்வளவு வித்தியாசம்!

ஒரே இந்தியா—இரண்டு உலகங்கள்!

ஓர் உலகம் தண்ணீர் தண்ணீர் என்று அலைந்தாலும் தண்ணீர் கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது.

மற்றோர் உலகம் தண்ணீர் என்று கேட்டவுடனே தண்ணீர் ஓடி வருகிறது விமானம் ஏறிக்கொண்டு.

ஏன் இந்த வித்தியாசம்?

இன்னமும் எத்தனை காலத்திற்கு இருப்பது இந்த வித்தியாசம்?

நல்லறிவாளர்கள் அனைவரும் இந்தக் கேள்விகளை நிச்சயம் கேட்டாக வேண்டும்.

கேள்விகள் கேட்டால் மட்டும் போதாது, கேள்விகளுக்குரிய விடைகளையும் கண்டாக வேண்டும்.

விடைகளைக் கண்டறிந்தால் மட்டும்கூடப் போதாது, இன்றைய வித்தியாசத்தைப்போக்குவதற்காக ஓயாது பாடுபட முன்வரவேண்டும் அறிவுள்ள மக்கள்.

* * *

தண்ணீர் விமானம் மூலம்பறந்து வருகிறது ஒருவருக்கு.

அதே நேரத்தில் பறந்து பறந்து அலைந்தாலும் தண்ணீர் கிடைக்காமல் திண்டாடித் தவிக்கின்றனர் வேறு சிலர்.

இந்த வித்தியாசம் இருப்பதற்குக் காரணம், பணம், ஒருவரிடத்திலே மாமலைபோலக் குவிந்துகிடக்கிறது.

மற்றவர்களிடத்திலே, பணமல்ல வறுமை, படுகுழிபோல் காட்சி தந்துகொண்டிருக்கிறது.

இந்த நிலை அழிக்கப்பட்டு, பணம், வறுமை, இரண்டும் எல்லோருக்கும் சமமாக்கப்பட வேண்டும்.

ஏழை என்று ஒருவனும் பணக்காரன் என்று ஒருவனும் தனித்தனியாக இருக்கும் தவறான முறை ஒழிக்கப்படவேண்டும்.

வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் அனைவருக்கும் குறைவறக் கிடைப்பதற்கு ஏற்ற விதத்தில் நாட்டின் பொருளாதார இயந்திரமும் சமுதாய அமைப்பும் மாற்றி அமைக்கப்படவேண்டும்.

ஓரே வார்த்தையில் சொல்வதானால் பொதுவுடைமை சகாப்தம் ஆரம்பமாகவேண்டும் இந்தியாவில்.

பொதுவுடைமை பூமியாக இந்தியா மறுமலர்ச்சி பெறுவதால்தான் இந்தியாவில் தண்ணீருக்காகத் தத்தளிக்கும் ஏழை உலகம் ஒருபக்கமும் ஆகாய விமானம் மூலம் தண்ணீர் பெறும் பணக்கார உலகம் மற்றோர் பக்கமுமாக இருக்கும் இன்றைய இழிநிலை ஒழியும்.

மனித உலகம் என்கிற ஒரே உலகம் இந்தியாவில் உருவாகும்.

அப்படி உருவாகும்படி செய்ய வேண்டியது நல்லறிவாளர்களின் கடமை.

(11-ம் பக்கம் பார்க்க)

அந்தப் பளபளக்கும் பச்சை நிறக் கார்!.........

அவனது வயிறு கிழிந்துவிட்டது! குடல் வெளியே தொங்கியது! காய்ந்துபோன உதடுகளை நனைத்த வாறு மண்டையிலிருந்து வழிந்த இரத்தம் அந்தத் தார் ரோடிலே சிறு வாய்க்காலாக ஓடியது.

அவன் தலையைத் தூக்கிப் பார்த்தான். காரின் பச்சை நிறம் மின்சார வெளிச்சத்திலே டால் அடித்தது இன்னும் கூர்ந்து பார்த்தான் முன்புபார்த்த அதே சிகப்புச்சேலைக்காரி, காரிலிருந்து தன்னை எட்டிப் பார்ப்பது அவனுக்குத்தெளிவாகத் தெரிந்தது. திடீரென, "இந்த உலகம்!............அது, பணக்காரரின் எழில் மாடம்! பாமரர்களின் பலி பீடம்!" என்ற கற்பனை அவன் மனதிலே மின்னி மறைந்தது. அதோடு அவன் தலையும் சாய்ந்தது!

மறுநாள் செய்தித் தாளில் "யாரோ ஒரு அனாதை, வழிதவறி நடந்ததால் கார் மோதி மாண்டான்" என்ற வரிகள் கடைசிப் பக்கத்தில் ஒரு மூலையிலே அச்சடிக்கப்பட்டிருந்தன!

---

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது மேல்சபைகள் என்பவை வெறும் பெயரளவுக்குத்தான் இருக்கின்றன. அவற்றிற்கென்று முக்கியமான அதிகாரங்கள் எவையும் கிடையாது இந்தக் காலத்தில்.

கீழ்சபைகள் நிறைவேற்றுகின்ற சட்டங்களைச் சிறிது காலத்திற்குத் தாமதிக்கலாம் என்பதைத் தவிர வேறு சிறந்த அதிகாரம் எதுவும் இல்லை மேல்சபையிடம்.

எனவே, இன்றைய நிலையில், கீழ்சபைகள்தான் உண்மையான சட்டசபைகள். மேல்சபைகள் என்பன வெறும் அலங்காரப் பதுமைகள்தான். என்றாலும்கூட, மேல் சபைகள் என்கிற ஓர் அமைப்பு இன்னமும் உயிரோடு இருப்பதும், அந்த அமைப்புக்கு மேல்சபை என்கிற பெயரும் நிலையும் இருப்பதும், அர்த்தமும் அவசியமும் இல்லாத நிலைமைகள்,

மேல்சபைகள் என்பன, பழமையின் சின்னங்கள், தேவையில்லாத உருவங்கள்.

அழிக்கப்பட வேண்டிய அமைப்பு முறைகள்.

சமுதாயத்தில் பிராமணன் என்றொரு மேல்ஜாதி இருப்பதைப் போல, பொருள் துறையில் முதலாளி என்றொரு உயர் வகுப்பு இருப்பதைப்போல, அரசியலில் மன்னன் என்றோர் தனிப் பிறவி உள்ளதைப் போல, ஆட்சித் துறையில் அமைந்துள்ள மேல்சாதிச் சின்னங்கள்தான் மேல்சபைகள்.

இப்படிப்பட்ட மேல்சபை சென்னை மாகாணத்துக்குத்தேவையில்லை என்பதைசென்னைமாகாண மக்கள் அனைவரும் நிச்சயமாக ஒப்புக் கொள்வார்கள்.

இப்போது இருக்கிற சென்னை மேல்சபையை ஒழித்துக்கட்டுகிற அதிகாரம் டில்லி பாராளுமன்றத்திற்குத்தான் உண்டு.

ஆனால் அப்படிச் செய்யவேண்டும் என்று சிபார்சு செய்கிற உரிமை. சென்னை மாகாண கீழ் சபைக்கு அதாவது சட்டசபைக்கு உண்டு.

ஆகவேதான், ஐக்கிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த தென்னேட்டி விஸ்வநாதன், சென்னை மாகாண மேல்சபையை ஒழித்துக் கட்டும்படி டில்லி பாராளுமன்றத்திற்கு சிபார்சு செய்யும் தீர்மானம் ஒன்றை சென்னை மாகாண கீழ் சபையில் விரைவில் கொண்டுவர இருக்கிறார்.

அவருடைய தீர்மானம் மிகவும் நியாயமானது. அதை காங்கிரஸ்காரர்கள் உள்பட அனைவரும் மனப்பூர்வமாக ஆதரிக்கவேண்டியது அவர்களுடைய முதற்பெருங் கடமையாகும்.

---

## கொடுவாய் (திருப்பூர்)
## தி. மு. க. முதலாண்டு விழா

1-6-55 ஞாயிறன்று, கொடுவாய் நாடக அரங்கில் பெத்தாம் பாளையம் தோழர் பழனிச்சாமி தலைமையில் நடைபெறும். பேச்சாளர்கள் :—தோழர்கள் சி. பி. சிற்றரசு, கோபி ஜீ. என் இராசு, அ. ச. இளங்கோ, முத்து இரத்தினம்.

---

## முகவூரில் நம் முழக்கம்!

வருகிற வைகாசித்திங்கள் 14வது நாள் (27-5-'52) செவ்வாய்க் கிழமை, முகவூர் திராவிட முன்னேற்றக்கழக சார்பில், கீழ வீதியில் கழகக் கட்டிட முன்பு,

தோழர். R. P. ஆதிநாராயணன் தலைமையில் இரவு 7 மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும், அவ்வமயம், தோழர் இரா. நெடுஞ்செழியன் "திராவிடம் ஏன் பிரிய வேண்டும்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

---


எமது புது வெளியீடு

சாக்ரடீஸின் பிரதம சீடனும் அரசியல் அறிஞனும் தத்துவ ஞானியுமாகிய

# பிளேட்டோ

[ வாழ்க்கை வரலாறு ]

ஆசிரியர்: கௌதமன்

அழகிய மூவர்ண அட்டையுடன் விலை ரூபாய். 1 0 0.
வியாபாரிகளுக்கு கழிவு 25% தபால் செலவு இனம்.
தனிப்பிரதி வேண்டுவோர்
M. O. மூலம் ரூ. 1 0 0 அனுப்பவும்.

**மின்னொளிப் பதிப்பகம்**
31 பீட், சென்னை—1.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

விடும்போலிருந்தது! வியர்வைத் துளிகள் கன்னத்திலே கண்ணாடி உருக்களாக உருண்டன!

ஆம்! தங்கம் இப்போது இல்லை! .........அவள் இறந்துவிட்டாள்! ஆனால், அவள் தானாக இறந்துவிடவில்லை!......இரத்தவெறி பிடித்த சொறிநாய்களின் கூரிய நகங்கள் அவளது கழுத்தை நெறித்துவிட்டன!......பிணப் பிசாசு அவளை மரணப் படுக்கையிலே தள்ளிவிட்டது!......

ஆம்! அன்று போராட்டதினம்! தொழிலாளிகள் சம்பள உயர்வு கோரி அன்று போராட்டம் நடத்தத் தீர்மானித்திருந்தனர்! திறந்த ஆலை திறந்தபடி வெறிச்செனக் கிடந்தது! என்றும்போல் சங்கு அன்றும் ஊதித் தன் கடமையைத் தீர்த்துக்கொண்டது! எழுபத்தை யாயிரம் தொழிலாளரின் ஆரவார ஒலியும், இயந்திரங்களின் ஓழியாத ஓசையும் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும் அந்த இடத்திலே பிணக்காட்டு அமைதி நிலவியது!

சுவரொட்டிகளும், துண்டுப் பிரசுரங்களும் அன்றுமாலை தொழிலாளர்கள் ஆலைமுன் ஆர்ப்பாட்டம் செய்யப்போவதைத் தெரிவித்தன!

காலை கடந்து, நண்பகல் போய் மாலையும் வந்துவிட்டது! ஆர்ப்பாட்டக்காரர்கள் பலப்பல அட்டைகளை ஏந்தியவாறு ஊர்வலம் வந்து இறுதியில் ஆலைமுன் அணிவகுத்து நின்றனர், வேடிக்கை பார்ப்பதற்காகக் கூடியிருந்த ஏராளமான மக்களும் 'என்ன ஆகுமோ' 'ஏது நேருமோ'—என்றஞ்சியவாறு ஒவ்வொரு விநாடியையும் கழித்துக்கொண்டிருந்தனர். யாரோ ஒருவன் கூட்டத்தின் நடுவிலிருந்த மேடையில் நின்று வேலைநிறுத்தத்தை விளக்கிப்பேச ஆரம்பித்தான். எங்கும் அமைதி பரவியது.

அப்போது போலீசு லாரிகள் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு பறந்தன! கூட்டம் சிதறியது! மக்கள் மூலைக்கொருவராகத் தாவிக் கொண்டிருந்தனர்!

துப்பாக்கிச் சப்தம் காதைத் துளைத்தது! அதைத் தொடர்ந்து "ஐயோ!" "அப்பா!" என்று கூக்குரலிட்டவாறு நான்கைந்துபேர் சுருண்டு விழுந்தனர்!

"இறந்தாயாடா மகனே!" என்று அலறியவாறு ஒரு கிழவி குண்டுதுளைத்து விழுந்த தனது மகனின் தலையை எடுத்து மடியிலே கிடத்தினாள்! அவன் நெஞ்சினின்று வழிந்த குருதியை வலதுகையால் அழுத்தி நிறுத்தி, இடதுகையால் அவனது தலையில் வடிந்திருந்த இரத்தத்தைத் துடைத்தாள்! அதற்குள் இன்னுமொரு குண்டு அவள் நெஞ்சைத் துளைத்தது! "மகனே!" "ஐயோ!" என்று கத்திக் கொண்டே அவன் உடல் மீது சாய்ந்தாள்! தாயும், சேயும் இரத்தக் குட்டையிலே மிதந்தார்கள்!

அதற்குள் ஏராளமானவர்களைக் கைது செய்து லாரியிலேற்றிவிட்டார்கள் போலீசுக்காரர்கள்! கைது செய்யப்பட்டவர்கள் கூட்டத்திலே கந்தசாமியும் நின்று கொண்டிருந்தான்! எங்கே தன் மகள் அக்கூட்டத்திலே வந்து சிக்கிவிடுகிறாளோ என்றஞ்சியவாறு கண்களை நாலாபக்கமும் சுழற்றியவாறிருந்தான்!

நல்லவேளை! அவளை எங்குமே காணோம்! அவனுக்கு முழுத் திருப்தி! நெஞ்சத்திலே ஒரு ஆறுதல்! அவ்வளவு கோரத்திற்கிடையிலும் அவன் ஓரளவு மகிழ்ச்சியோடு காணப்பட்டான்! அவ்வளவு பாசம் மகளிடத்திலே அவனுக்கு!

ஆனால்!............?

"அப்பா!............"

பத்து நாட்களாகப் பட்டினி போடப்பட்டு அவிழ்த்துவிடப்பட்ட வேங்கை, பசி வெறியோடு அவனை அறைந்து கன்னத்தின் சதையைக் கிழிப்பதுபோலிருந்தது கந்தசாமிக்கு!

திரும்பிப் பார்க்க மனமின்றித் திரும்பிப் பார்த்தான் அவன்! அந்தக் குரல் அவளுடையதுதான்! அவன் திரும்பிப் பார்ப்பதற்கும் அந்த குண்டு அவள் நெஞ்சிலே பாய்வதற்கும் சரியாக இருந்தது! பள்ளி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்த தங்கம், கூட்டத்தைக் கண்டு அங்கு வந்தவள், தன் தந்தை லாரியிலே நிற்பதைக் கண்டு பீதியோடு "அப்பா!" என்று கத்திக் கொண்டே ஓடினாள் அவனைநோக்கி! அப்படி ஓடிக்கொண்டிருக்கும் போதுதான் சுட்டுத்தள்ளிவிட்டான் அந்தக் கொலைபாதகப் போலீஸ்காரன்!

பாயும் புலிக்குட்டி சுடப்பட்டவுடன் துடிதுடித்துச் சுருளுவதைப் போல மண்ணிலே உருண்டு கொண்டிருந்தாள் தங்கம்! அப்பா... அப்பா," என்ற அலறல் அந்தக் கூட்டத்தின் இரைச்சலைக் கிழித்துக்கொண்டு கேட்டது! கந்தசாமியின் உள்ளம், உடல் அங்கமெல்லாவற்றிலும் பழுக்கக் காய்ச்சிய ஈட்டிகள் சொருகிச் சொருகி இழுக்கப்படுவதுபோலிருந்தது!

அவன் தன்னை இருபக்கத்திலும் பிடித்துக்கொண்டிருந்த ஜவான்களை உதறித் தள்ளிவிட்டு லாரியிலிருந்து கீழே குதித்தான்! ஆனால் அதற்குள் கீழேயிருந்த போலீசுகள் அவனைப் பிடித்துத் திரும்பவும் லாரியிலே போட்டு விட்டனர்! "ஐயோ! என் மகள்!.........என் மகள்!" என்று கதறினான் அவன்!

"ஐயோ! அப்பா!......அப்பா!" என்று பதில் கொடுத்தாள் அவள். அவளது பாவாடை, ரவுக்—எல்லாம் இரத்தத்தால் நனைந்துவிட்டிருந்தன! கொள்ளையழகு பூத்துக் குலுங்கும் அந்த முகத்திலே இப்போது இரத்தம் வழிந்து கோரமாகக் காட்சிதந்தது!

அந்த மாற்றுக் குறையாத தங்கக்கட்டி தங்கம் இரண்டு முறை கால்களை வலித்தாள்! அதுதான் அவள் சாவோடு நடத்திய கடைசிப் போராட்டம்!

லாரி புறப்பட்டுவிட்டது அன்று லாரியிலே ஏறிச் சென்றவன் இன்றுதான் சிறை உலகத்தை விட்டு வெளிவந்து, வெளி உலகத்தைப் பார்க்கிறான், ஐந்தாண்டுக் கால இடைவேளைக்குப் பிறகு!

அவனது சிந்தனை உலகம் மறைந்தது! வெறும் இருள் உலகம் அப்போது அவனுக்குஎதிரே காட்சி தந்தது!

அந்த உலகத்தின் எனைப்பக்கத்திலிருந்து, "தங்கம் இல்லை!......தங்கம் இல்லை!.........தங்கம் இல்லை!" என்று எழுந்த உரத்த ஒலி அவனது கர்ணபேரிகைளில் மோதித் தெறித்தது!

அவன் வெறிபிடித்தவன் போல எழுந்து ஓடினான்! ஓடிக்கொண்டேயிருந்தான்! அதுவும் நடைபாதையைவிட்டு இறங்கி வீதியில் ஓடிக் கொண்டிருந்தான்! உயிரைப் பற்றிய கவலையின்றி ஓடிக்கொண்டிருந்தான்!

எத்தனையோ பஸ்கள், கார்கள் ட்ராம்கள் அவனைத் தாண்டிச் சென்றுவிட்டன! அவை ஒன்றும் அவன் உயிரைக் குடிக்கவில்லை!

ஆனால்!............

(10-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# அனாதை!

[ தில்லை—தொல்காப்பியன் ]

அந்தப் பள பளக்கும் பச்சை நிறக்காரிலிருந்து சல சலக்கும் சிகப்பு நிறச் சேலைக்காரி யொருத்தி சிங்காரமாக வந்திறங்கினாள்!

அவளது வரவுக்கென நெடுநேரமாகக் காத்துக் கொண்டிருப்பவனைப் போல அவளை நோக்கி ஓடினான் அவன். அவள் திரும்பிப் பார்த்தாள். அவன் கையை நீட்டி, "அம்மா! இரண்டு நாள் பட்டினிங்க!......ஏதாச்சும் தருமங்க சாமி!......ரொம்பப் புண்ணியமுங்க!........"—என்று சொல்லித் தொடர்ந்தான் மேலே! அவள் காதைச் செவிடாக்கிக் கொண்டு நடையைக் கட்டினாள் உள்ளே!

பரட்டைத் தலையிலே படிய மறுத்துத் திரிந்த உரோமங்கள் அவனது உருக்கமான கதையைச் சொல்லிச் சொல்லி உலர்ந்து விட்டிருந்தன! சோர்ந்து சொக்கிக் கிடந்த அவனது கண்கள், ஆயிரமாயிர முறை அவனது சோக வரலாற்றை விளக்கி அழுது அழுது நீர் வற்றிப் போயிருந்தன! அவனது நீண்ட பெரு மூச்சுக்களிலே உலகத்தின் ஏழ்மை எதிரொலித்தது! கன்னக் குழிவுகளில் கவலை தேங்கிக் கிடந்தது! நெற்றிச் சுருக்கங்களில் துயரச் சிந்தனைகள் நெளிந்து கொண்டிருந்தன! அழுக்குப் படிந்த அந்த அரைக்கைச் சட்டையும் அதிலேயிருந்த கிழிசல்களும் அவனது வறுமைக்குப் பறையடித்தன! முட்டிக் கால்கள் வரை எட்டியும் எட்டாமலும் நின்று இடுப்பிலே ஒட்டிக்கொண்டிருந்த அந்த நான்கு முழத் துண்டு அவனது ஏழ்மைக்குக் கட்டியங் கூறின!

அவனது உருவம் பங்களாச் சுவர்களுக்கிடையில் மறைந்து விட்டது. இருந்தாலும் அவன் இன்னும் அங்கேயே நின்றுகொண்டிருந்தான்.

பங்களாவின் முகப்பிலே அழகாகக் காட்சி தந்த சிறுதோட்டத்தை அவன் பார்த்தான். இளம் சவுக்கைகள் ஒழுங்காகக் கத்தரிக்கப்பட்டு இரு பக்கத்திலும் அடர்த்தியாக வளர்க்கப் பட்டிருந்தன. இவற்றின் நடுவில் சிமெண்ட்டினால் கட்டப்பெற்ற சிறு குளமொன்றிருந்தது. அதன் மத்தியிலிருந்து வந்த குழாயின் கண்களிலிருந்து நாலாப் புறமும் தொடர்ந்து சிதறிக் கொண்டிருந்த நீர், இலேசாக மழை பெய்வதுபோல் காட்சியளித்தது. பக்கத்தில் வளர்ந்திருந்த செடிகளில் கொத்துக் கொத்தாகச் சிகப்பு மலர்கள் தொங்கின. பாத்திகளில் வளர்க்கப்பட்டிருந்த குரோட்டன்ஸ் செடிகளின வண்ணப் பூக்கள் மாலை நேரத் தென்றற் காற்றிலே இலேசாக ஆடின.

இந்த வண்ணப் பூக்களை வெறித்துப் பார்த்தான் அவன் கண்ணைக் கவர்ந்து அழகை அள்ளி அள்ளிச் சொரிந்தன அந்தப் பூக்கள்; ஆனால் எந்தப் பெண்ணாவது அந்த மலர்களைத் தலையில் சூடிக் கொள்கிறாளா?......ஆம்! அவை மணமற்றவை! அவற்றைப் போலத்தான் இதயமற்ற அந்தப் பெண்ணும்...........

அவன் முகத்திலே வெறுப்பு நிழலாடியது; அவன் அந்த இடத்தை விட்டு நகர்ந்து நடைபாதையிலிருந்த சிறு மேடையிலமர்ந்தான்.

பீச்சுக்குச் செல்லும் அந்தப் பாதையிலே கார்கள் பறந்து கொண்டிருந்தன. நடக்க இடமின்றி மக்கள் கூட்டம் திணறிக் கொண்டிருந்தது. பலர் பஸ்ஸுக்காகக் காத்துக் கிடந்தனர். ஆனால் வந்த பஸ் அங்கு நிற்காமலேயே ஓடியது; 'இடமில்லை' என்று கையை விரித்தான் கண்டக்டர். நின்று நின்று களைத்துப்போன அந்த ஏமாற்றத்தின் பிரதிபிம்பங்கள் ஏதேதோ முணு முணுத்தன.

நகரத்தின் நாகரீகமே கடற்கரையை நோக்கிப் படையெடுத்துக் கொண்டிருந்தது! பவுடர் வானத்திலே, பகட்டுச் சிறகடித்துப் பட்டுப்பூச்சிகள் பல பறந்து கொண்டிருந்தன! அந்தப் பட்டுப் பூச்சிகளின் அழகை ரசித்தவாறே நடந்து கொண்டிருந்த ஒருவன், எதிரே வந்து கொண்டிருந்த மற்றொரு பெரியவரின் மண்டையோடு 'மடார்' என மோதினான்! அவ்வளவுதான்! வலி பொறுக்க முடியவில்லை அவருக்கு; வந்து விட்டது கோபம்; "ஏம்பா உனக்குப் புத்தியில்லே!......மண்டைக்கு மேலேயா கண் இருக்கிறது!......ஒழுங்கா போயி பத்திரமா திரும்பிவா!"—என்ற வார்த்தைகளை வீசி விட்டு தலையைப் பிடித்துக் கொண்டே நடந்தார் அவர்.

"மடையன்!......அழகை ரசிக்கத் தெரியாத அற்பன்!......நல்ல சமயத்திலே கெடுத்து விட்டான்!"-என்று மனதிற்குள்ளேயே திட்டிக் கொண்டு, தன்னை யாராவது அந்த நிலையிலே பார்த்து விட்டார்களோ என்று அஞ்சியவாறு ஒரு முறை சுற்றிலும் பார்த்தான், அந்த "அழகு ரசிகன்."

இரண்டு பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் அவனைப் பார்த்துக் கெக்கொலி கொட்டிச் சிரித்தனர்! நல்ல வேளை! அந்த 'அழகு ரசிகனு'க்கு நெற்றிக் கண்கள் இல்லை! இருந்திருந்தால் சிறுவர்களின் சாம்பல்தான் அங்கே மிஞ்சியிருக்கும்! அவ்வளவு உக்கிரமாக அவர்களைப் பார்த்தான் அவன்.

இந்தக் காட்சிகளை மேடைமீது அமர்ந்தவாறு கவனித்துக் கொண்டிருந்த அந்தப் பிச்சைக்காரனுக்குக் கூடச் சிரிப்பு வந்து விட்டது, சோகச் சூறாவளிக் கிடையிலும் இன்பப் பிடிப்புக்கள் மலிந்து கிடப்பதை உணர்ந்தான் அவன்.

அப்போது தெருவிலே வாலைக் குழைத்துக் கொண்டு நின்ற நாயொன்று திடீரெனப் பாய்ந்தது. அதன் பின்னால் ஒரு பச்சை நிறக்கார் வந்து நின்றது. கார் டிரைவர், "சீ நாய்! இத்தனை நேரம் செத்திருந்தால் தெரியும்!"—என்று அதோடு பேசிவிட்டு மீண்டும் ஓட்ட ஆரம்பித்தான் காரை!

அந்த சிகப்புச் சேலைக்காரியின் கார்தான் அது! உள்ளே அவள் உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான் அந்தப் பிச்சைக்காரன். ஆனால், இப்போது அவளுக்குப் பக்கத்திலே ஒரு இளைஞனும உட்கார்ந்திருந்தான். அவர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர்.

"வாழ்க்கை!—சிலருக்கு அது ஒரு வேடிக்கை விளையாட்டு! பலருக்கு அது ஒரு பயங்கரப் படுகுழி! சீமான்களிடம் அது சிரித்துப் பேசு

கிறது! அவர்களைத் தன் மடியிலே கிடத்திக் கொஞ்சுகிறது! ஆனால் ஏழைகளென்றாலே அவர்களை எற்றித் தள்ளுகிறது! அவர்களை ஏறெடுத்துப் பார்க்கவும் அஞ்சுகிறது!......பண முள்ளவர்களிடம் அது பழகும் முறையே வேறு தான்'.......ஆம்! அது ஒரு விலைமகளைப் போல...இல்லையில்லை!... வாழ்க்கையை அமைத்துக் கொள்வது நாம்!...அப்படியிருக்க அதன் மீது குறை கூறுவது சரியா?...''

இப்படித் தன் மனப்புத்தகத்தில் வாழ்க்கை விமரிசனத்தைச் சிந்தனைப் பேனாவினால் தீட்டிக்கொண்டே எழுந்து நடக்க ஆரம்பித்தான் அந்தப் பிச்சைக்காரன்.

கால்போன போக்கில் நடந்து கொண்டிருந்த அவன் அந்தப் பெரிய பூங்காவினுள் நுழைந்தான். அங்கே சிறுவர்கள் சிலர் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந்தனர். குழந்தையொன்றைத் தள்ளுவண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டிருந்தான் ஒருவன். சுண்டல்காரப் பையன் சுறுசுறுப்பாக அலைந்து கொண்டிருந்தான். அரசியலை அணு அணுவாகப் பிய்த்து அதனுள் நுழைந்து அலசி அலசிப் பார்த்துக் கொண்டிருந்தன, அரசியல் அரிச்சுவடிகள் பல, ஒரு பக்கத்திலே! சினிமா விசிறிகள் சில விமரிசனக் குட்டையிலே நீச்சலடித்துக் கொண்டிருந்தன!

இந்தக் கூட்டத்தையெல்லாம் தாண்டிக் கொண்டு தனிமையான ஒரு இடத்தை நோக்கி நடந்தான் அவன். அப்போது நன்றாக இருட்டி விட்டது.

''அகில இந்திய ரேடியோ! திருச்சி நிலையம்! சித்திரகானம்!''-என்ற வர்ணொலியின் அலறல் கொர கொர சப்தத்திற்கிடையிலே ஒலித்து மறைந்தது.

அடுத்துக் கேட்ட, ''ஏழைக்கு ஏது இன்பம்'' என்ற பாட்டின் ஒலி அந்தப் பூங்காச் சுவர்களில் மோதி எதிரொலித்தது. அவனைச் சுற்றிலும் காணப்பட்ட இருள் பிராந்திய முழுவதிலும் துயரம் அழுந்திக் கிடப்பதாகப் பிரமை தட்டியது அவனுக்கு. விளையாடிக் கொண்டிருந்த பணக்கார வீட்டுப் பையனொருவன், பக்கத்தில் கிடந்த கல்லையெடுத்து சுவரோரமாக ஓடிக்கொண்டிருந்த நாயைப் பார்த்துக் குறி வைத்தான். ''வாழ், வாழ்'' என ஊளையிட்டவாறே ஓடியது அந்த நாய். 'வீல்' என்ற அந்த நாயின் அழுகை பிச்சைக்காரனின் மனதில் சுரீர் எனத் தைத்தது.

அப்போது, கையைப் பிடித்துத் தன் குருட்டுத் தந்தைக்கு வழி காட்டியவாறு நடந்து கொண்டிருந்த ஒரு சிறுமி அவனிடம் வந்து நின்று, ''கண்ணில்லாத குருடுங்க சாமி!......காலணா தருமங்க!...'' என்று கெஞ்சினாள், தலை சுற்றுவது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது அவனுக்கு கண்ணிலிருந்து வழிந்த நீர் கன்னத்தின் வழியாக ஓடி இலேசான சிரிப்பைத் தெளித்துக்கொண்டிருந்த 'இதழ்'களில் தடைபட்டு நின்றது ஆம்! அழுகையும் சிரிப்பும் அவனை ஒரே நேரத்தில் முற்றுகை யிட்டன.

பிச்சைக்காரனிடமே பிச்சை கேட்ட அந்தப் பெண் இன்னும் நின்று கொண்டிருந்தாள். அவன் பையில் கையை விட்டுத் துழாவினான். வெளியிலே கையை எடுத்த போது தேய்ந்துபோன ஐந்து செப்பு நாணயங்கள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தன! அவற்றில் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்தான்! அவன் நகர்ந்தான். இப்படி ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டே சென்ற அந்தச் சிறுமி அவன் பார்வையிலிருந்து மறைந்து போய் விட்டாள்!

ஆனால் அவளது உருவம் அவனது உள்ளக் கடலிலே உணர்ச்சி அலைகளை உண்டாக்கி விட்டிருந்தது! மறந்து போன எண்ணங்களை அந்த அலைகள் மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவந்து விட்டன!

அவன் கண்களிலிருந்து பொல பொல வென்று நீர்த்திவலைகள் உதிர்ந்தன. அவனது பார்வை மங்கியது. அந்த மங்கிய பார்வையிலே கடந்த கால நிகழ்ச்சிகள் நிழற்படமாடின. அவன் ஐந்தாண்டுகளுக்கு முன் சஞ்சரித்தான்.

காலை மணி ஆறு; ஆலைச் சங்கு காதுகுடையக் கத்துகிறது, கதவு திறக்கப்படுகிறது; காத்துக்கிடந்த தொழிலாளிகள் உள்ளே நுழைகிறார்கள்; இதுவரை ஒரே ஒலியும், ஆரவாரமுமாக இருந்த அந்த இடத்தை அமைதி தழுவியது. தொழிலாளிகள் இயந்திரத்தோடு இயந்திரமாகப் போராடத்தொடங்கி விட்டனர். அதோ, அந்தக் கூட்டத்திற்கிடையிலே கந்தசாமியும் ஒருவனாகக் காட்சி தருகிறான்.

ஆம்! அப்போது அவன் கந்தசாமி! ஆனால் இப்போது!...பிச்சைக்காரன்! ரெங்கநாதர் டெக்ஸ்டைல்ஸின் எழுபத்தையாயிரம் தொழிலாளர்களில் கந்தசாமியும் ஒருவன். அவனது மனைவி இரண்டாண்டுகளுக்கு முன்பே தொழிலாளர் தோழனான காசநோய்க்குப் பலியாகி விட்டாள். இப்போது அவனது ஒரே வாரிசு அவன் மகள் தங்கம் தான்.

தனது குருட்டுத் தந்தைக்கு வழி காட்டிக்கொண்டு வந்து தன்னிடம் பிச்சை கேட்ட அந்தப் பிச்சைக்காரப் பெண்ணைப் பார்த்ததும் தன் மகள், தங்கத்தின் நினைவு வந்து விட்டது அவனுக்கு.

ஒரு நாள் மாலை; கந்தசாமி தன் குடிசையை நோக்கி நடந்துகொண்டிருக்கிறான்; ஆலை வேலை முடிந்து விட்டது; அப்போது பள்ளிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த அவனது மகள், எட்டு வயதுச் சிறுமி, —தாயற்ற தங்கம் அவனிடம் ஓடோடியும் வந்து ''அப்பா! காசுப்பா!......'' என்றாள். அவன் அப்படியே அவளை வாரியணைத்துக் கையிலே காலணாவை வைத்தான்; அவள் பக்கத்திலிருந்த மிட்டாய்க் கடைக்குத் தாவினாள்.

பிச்சைக்காரப் பெண் தன்னிடம் காசு கேட்டபோது இந்தக் காட்சிதான் அவனுக்கு நினைவுக்கு வந்தது. அவனால் பொறுக்க முடியவில்லை......

தங்கம்!......வெள்ளி நாணயங்களை வாரி இறைப்பதைப் போலக் கலகலவெனச் சிரிக்கும் அந்தத் தங்கம்! கழுத்துச் சங்கிலியிலே தொங்குகின்ற அந்த டாலர் இப்படியும் அப்படியும் ஆடும்படி ஓடி வரும் தங்கம்! தலையிலே பின்னி விடப்பட்ட இரண்டு கடைக் கற்றைகளும் அவனது இரு கன்னங்களிலும் உராயும்படி அவனது கழுத்தைக் கட்டிக்கொண்டு பின்புறமாக நிற்கும் அந்தத் தங்கம்! அடிக்கொரு தடவை 'அப்பா' 'அப்பா' என்றழைக்கும் அவனது இதயத் தடாகத்தின் வாடாத தாமரை தங்கம்!......

அவனது நரம்புகள் துடித்தன! முகத்திலே பிரேதக் களை தட்டியது! அவன் நெஞ்சம் வெடித்து

([illegible]ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இப்போதோ அவர் ஓர் அதிதீவிர அரசியல் வாதியாக இருந்துவருகிறார். இப்படி இருந்துகொண்டே அவர் அரசியல் என்பது தேவையற்ற காரியம் என்று வாய்கூசாமல் கூறுகிறார்.

பிச்சைக் கிண்ணியைக் கையிலேந்திக்கொண்டே நாராயணசாமி மற்றவர்களைப் பார்த்துப் பிச்சையெடுப்பது மகா பாவம் என்று கூறியதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

டாக்டர் தொழில்மூலம் ஏராளமாகப் பணம் சேர்த்து வரும் திகம்பரசாமி அப்படிப் பணம் சேர்த்துவரும் காரியத்தைச் சிறிதளவுகூட தளர்த்தாமலே டாக்டர் தொழிலா—ஐயையோ அது அக்கிரமமான தொழிலாயிற்றே என்று அலறுவதற்கும், ஆச்சாரியாரின் பேச்சுக்கும் என்ன மாறுபாடு இருக்கிறது?

பிச்சைக்கார நாராயணன்,

கன்னக்கோல் கந்தப்பன்,

பிரபல டாக்டர் திகம்பரசாமி

வழக்கறிஞர் வரதராஜர்

இவர்களுடைய நிலையிலேதான் ஆச்சாரியார் இருக்கிறார் என்று நாம் கூறினால் ஆச்சாரியார் நம்முடன் சண்டைக்கு வரக்கூடும்—ஆகவே ஆச்சாரியாரே—கூறட்டும் — அவருடைய பேச்சு மேலே நாம் குறிப்பிட்டுள்ள இவர்களுடைய பேச்சுக்களைப் போலவே இருக்கின்றதா, இல்லையா?

என்ன அர்த்தம் ஆச்சாரியாருடைய பேச்சுக்கு?

அரசியல் என்பது எனக்கு மட்டும்தான் சொந்தம். உங்களுக்கெல்லாம் அதிலே பங்கில்லை என்று அர்த்தமா?

அரசியல் உலகிலே கிடைக்கக்கூடிய பட்டம் பதவி முதலிய இலாபங்களையெல்லாம் நானேதான் அனுபவித்தாக வேண்டும், வேறு யாரும் போட்டிக்கு வந்துவிடக்கூடாது என்று அர்த்தமா?

அரசியல் என்பது ஆச்சாரியாருடைய வர்க்கத்துக்கு மட்டும்தான் ஏகபோக உரிமை, இஸ்லாமிய இனத்தவருக்கு அந்த உரிமை இல்லை என்று அர்த்தமா?

எந்த அர்த்தத்திலே ஆச்சாரியார், இஸ்லாமிய இனத்தவர்களைப் பார்த்து நீங்களெல்லாம் அரசியலில் நுழையக்கூடாது என்று கூறியிருக்கிறார்?

எந்தப் பொருளிலே ஆச்சாரியார் அன்றையதினம் சொற்பொழிவாற்றியிருந்தாலும் சரி, அவருடைய பேச்சை நாணயமானது என்று யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

"ஒவ்வொரு மதமும் அந்தந்த மதத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி இப்படி நடக்கவேண்டும் என்று சிற்சில கோட்பாடுகளை வகுத்திருக்கிறது. அவற்றையெல்லாம் மக்கள் அப்படி அப்படியே பின்பற்றி நடப்பார்களானால் அந்தந்த சமூகமட்டுமல்ல, நாடு பூராவுமே சந்தோஷமாக வாழமுடியும். ஆனால் சில மக்கள் அவரவர்களுடைய மதம் வகுத்துள்ள முறைப்படி நடந்துகொள்வதில்லை. அதனால்தான் உலகில் பற்பல சிக்கல்களும் உண்டாயிருக்கின்றன."

அதே கூட்டத்தில் ஆச்சாரியார் நமக்கெல்லாம் அளித்திருக்கிற மற்றொரு அறிவுரை இது.

ஒவ்வொரு மனிதனும் தன் தன் மதம் விதித்துள்ள கட்டளைப்படியேதான் காரியமாற்ற வேண்டுமாம்!

அப்படிக் காரியமாற்றாத காரணத்தால்தான் உலகிலே இன்றையதினம் பற்பல சிக்கல்களும் ஏற்பட்டுவிட்டனவாம்!

கூறுகிறார் ஆச்சாரியார் இப்படியெல்லாம்!

அப்படியானால் ஆச்சாரியார் மட்டும் ஏன், இந்துமதம், அவருக்கும் அவருடைய இனத்தவருக்கும் விதித்துள்ள கட்டளையை மீறி நடந்துவருகிறார்?

வேதம் ஓதுவது—பஜகோவிந்தம் பாடுவது—ஆண்டவனை வழிபடுவது—யாகம் நடத்துவது—கடுந்தவம் புரிவது—கானகத்தில் வாழ்வது—உலக பந்தங்களை வெறுப்பது—முழுத்துறவியாக வாழ்வது—லௌகீக விவகாரங்களில் மனத்தைப் பறிகொடுக்காமல் ஒவ்வொரு விநாடியையும் ஆண்டவனைப் பற்றிய நினைப்பிலேயே செலவழிப்பது-இதுதானே, இந்துமதம், பிராமண இனத்தவருக்கென்று வகுத்துக் கொடுத்துள்ள பாதை?

ஆச்சாரியார் இந்தப் பாதை வழியாகவா நடந்து வருகிறார்? கவர்னராகவும் கவர்னர் ஜெனரலாகவும் மத்திய மந்திரியாகவும் மாகாணப் பிரதமராகவுமல்லவா தன்னுடைய வாழ்நாளை வீண் நாளாக்கிவருகிறார்?

"உலக விவகாரங்களில் ஈடுபடாதே—ஆண்டவனைப் பற்றியே விநாடிதோறும் எண்ணிடு"—இந்து மதம் இப்படிக் கட்டளையிடுகிறது ஆச்சாரியாருக்கு. ஆனால் ஆச்சாரியாரோ ஓயாமல் உலக விவகாரங்களில் தான் ஈடுபட்டுவருகிறார். இன்றைய தினம் வரையில்கூட அவர், திரு ஓடு ஏந்திக்கொண்டு திருக்காஷாயம் தரித்துக் கொண்டு, சந்நியாசகோலம் பூண்டதாகத் தெரியவில்லை.

இவர் மட்டும் மதக் கட்டளையை மீறலாம், மற்றவர்கள் தான் மீறக்கூடாதா?

(16-ம் பக்கம் பார்க்க)

# ரஷ்யாவா? போகாதே!

## சீனாவா? நுழையாதே!

"ரஷ்யாவா? போகாதே! சீனாவா? நுழையாதே!"—இது, ஜவஹர் சர்க்காரின் கட்டளை.

ரஷ்யாவுக்கோ சீனாவுக்கோ போகவேண்டுமென்று யார் கேட்டாலும் சரி, உடனே அனுமதிச் சீட்டு தரமுடியாது என்று கண்டிப்பான குரலில் கூறத் தொடங்கிவிட்டது பண்டித நேருவைத் தன் முதலமைச்சராகக் கொண்டிருக்கும் மத்திய ஆட்சி.

சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் போக விரும்பியவர்களில் இருபத்திநான்கு பேருக்கு அனுமதிச் சீட்டு அளிக்கப்படவில்லையாம்—பண்டித நேருவே அளித்திருக்கிறார் இந்தத் தகவலை.

ரஷ்யாவின் பெயரையோ, சீனாவின் படத்தையோ கண்டால் ஏன் இப்படி அஞ்சி நடுங்க வேண்டும் ஜவஹர் ஆட்சி?

இந்தியத் துணைக் கண்டத்தில் வாழும் மக்களின் தொகை ஏறத்தாழ முப்பத்துமூன்று கோடி.

இந்த முப்பத்துமூன்று கோடிப் பேரில் கேவலம் இருபத்திநான்குபேர் மட்டும் ரஷ்யாவுக்கோ அல்லது சீனாவுக்கோ போய்விட்டு, ஒரு ஐந்து நாட்களோ பத்துநாட்களோ அங்கே தங்கிவிட்டு, பிறகு போனபடியே திரும்பிவந்துவிடுவதாலே என்ன நஷ்டம் ஏற்பட்டுவிடும் இந்திய சர்க்காருக்கு?

ஒரு சக்கரை செட்டியாரோ அல்லது ஒரு ஜீவானந்தமோ சீனாவுக்குப் போய்த் திரும்பிவருவதாலே என்ன பெரிய கெடுதி ஏற்பட்டுவிடும் இந்திய சமுதாயத்திற்கு?

பூகம்பம் ஏதாவது ஏற்பட்டு இந்தியாவை அப்படியே அள்ளி விழுங்கிவிடுமா?

அல்லது இந்த மகா சமுத்திரம் பொங்கி எழுந்து ஆயிரக்கணக்கான மக்களைத் தின்று தீர்த்துவிடுமா?

அல்லது வடக்கே இருக்கும் இமயமலை திடுதிடு வென்று அசைந்து ஆடி, எழுந்து நடந்து, தெற்கே உள்ள கன்னியா குமரிக்கு வந்துவிடுமா?

அல்லது இந்தியத் துணைக் கண்டத்தில் உள்ள முப்பத்து மூன்று கோடிப் பேரும் ஒரே விநாடியில் ஒவ்வொரு லெனினாகப் புது உருவம் பெற்று மாறி இந்திய ஆட்சியாளர்களை ஒரு குலுக்குக் குலுக்கிவிடுவார்களா?

சீனா அல்லது ரஷ்யா என்ற சொல்லைக் கேட்டாலே ஏன் தானோ இப்படி நடுநடுங்குகிறார்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்கள்? பிரிட்டனுக்குப்போகவேண்டுமா—ஆஹா சரி—போய்வாருங்கள் என்கிறார்கள் ஆட்சியாளர்கள்.

அமெரிக்காவுக்குச் செல்ல உத்தேசமா—அதற்கென்ன ஆட்சேபனை—இப்போதே செல்லுங்கள்—தாமதம் வேண்டாம் என்று இன்பக் குரல் எழுப்புகிறார்கள் நேரு சர்க்கார்.

ஆனால் சீனா, ரஷ்யா என்கிற பெயர்களைக் கேட்டால் மட்டும் ஆத்திரத்தைக் காட்டுகிறார்கள். கோபத்தைக் கக்குகிறார்கள், ஏனோ இந்த விபரீதப் புத்தி "நம்" சர்க்காருக்கு?

ரஷ்யாவிலேயும் சீனாவிலேயும் பாட்டாளிகளின் ஆட்சி பூத்திருக்கிறது என்பது உண்மை.

ஏழை என்றும் செல்வன் என்றும் எவனுமில்லை நாட்டினில் என்கிற இலட்சிய கீதத்தை நடைமுறை சாதமாக்கியிருக்கிறார்கள் அந்த நாடுகளில்—அதுவும் உண்மை.

இல்லாமை, போதாமை, வறுமை, ஏழ்மை—இந்தப் பொல்லாங்குகளையெல்லாம் பொடிப் பொடியாக்கிவருகிறார்கள் அந்த நாடுகளில்—அதுவும் முழு உண்மை.

இந்தியாவிலிருந்து அந்த நாடுகளுக்குப் போகிறவர்கள், அங்கே நடம்புகிற இந்தப் புது வாழ்வைக் கண்டுவிட்டு, இப்படிப்பட்ட புதுவாழ்வு இந்தியாவிலும் ஏற்படவேண்டும் என்று ஆசைப்படுவார்கள்—அதுவும் உண்மைதான்.

ஆசைப்படுவது மட்டுமல்ல! அந்த ஆசையை நிறைவேற்ற அல்லும் பகலும் அரும்பாடு படவும் தயங்கமாட்டார்கள்—அதுகூட உண்மைதான்.

உண்மையாக இருக்கட்டுமே, இருந்தாலென்ன? ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் போய்வருவதாலே, ஒரு சிலர், இந்தியாவிலேயும் பாட்டாளிகள் ஆட்சியை நிலைநாட்ட வேண்டுமென்று பாடுபடத் தொடங்கினால், அதனால் நேருவுக்கு என்ன நஷ்டம்?

பாட்டாளிகள் ஆட்சி ஏற்படுவது நேருவுக்குப் பிடிக்காதா என்ன?

பிடித்தமானதுதான் என்றால் பிறகு ஏன் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் போகிறவர்களைப் போகாதே என்று தடுக்கிறார்?

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர், தன்னுடைய மதக்கட்டளையை மீறுவதால் உலகத்தில் சிக்கல் ஏதுவும் ஏற்பட்டு விடாது. மற்றவர்கள் மீறினால்தான் சிக்கல் ஏற்பட்டு விடுமோ?

இவருக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதியா?

மதக் கட்டளைப்படி நடவுங்கள்—அப்படி நடந்தால்தான் உலகில் ஆனந்தம் அரசோச்சும் என்று இஸ்லாமியர்களைப் பார்த்து அறிவுரை கூறுகிறாரே ஆச்சாரியார், அதே அறிவுரையை ஏன் அவர் பிராமண இனத்தவரைப் பார்த்துக் கூறவில்லை.

உணவுப் பொருளை விலைக்கு விற்பது மகா பாவம் என்று இந்து மதம் கூறுகிறது. ஆனால் பிராமணத் தோழர்களோ ஊருக்கு ஊர் 'ஓட்டல்' வைத்து நடத்துகிறார்கள். அதாவது மதக் கட்டளையை. மீறுகிறார்கள். ஏன் இதைக் கண்டிக்கவில்லை ஆச்சாரியார்?

"கடலைத் தாண்டாதே—தாண்டுவது குற்றம்!"—கூறுகிறது இந்துமதம் ஆனால் பிராமண இனத்தவரிலோ பலர், பற்பலர், இலண்டன் சென்று, ஐ. சி. எஸ். பட்டம் பெற்று, இங்கே திரும்பிவந்து கலெக்டர்களாகவும் சர்க்கார் அதிகாரிகளாகவும் கொலுவீற்றிருக்கின்றனர். இதை ஏன் இன்றளவும் எதிர்த்துப் பேசிக் குற்றம் கூறவில்லை ஆச்சாரியார்?

உலக பந்தயங்களை விடு! காவி காஷாயத்தைக் கையிலெடு! என்கிறது இந்து மதம். ஆனால் பிராமண இனத்தவரோ சந்நியாச கோலமா—சீ—அதை விடு—கோட்டும் சூட்டும் கையிலெடு என்று கூறிவருகின்றனர். ஏன் இதை மகாபாவமான நடத்தை என்று கண்டிக்கவில்லை ஆச்சாரியார்?

இஸ்லாமிய இனத்தவருக்கு ஒரு நீதி, இவருடைய இனத்தவருக்கு மற்றோர் நீதியா?

* * *

*** ராஜிய விவகாரங்களில் நுழையாதீங்கோ!**

*** மதம் இடுகின்ற கட்டளைப்படி வாழ்க்கையை நடத்துங்கோ!**

மற்றவர்களுக்குக் கூறுகிறார் ஆச்சாரியார் இந்த இரட்டை உபதேசத்தை!

ஆனால் இவரோ இந்த உபதேசத்திற்கு நேர்மாறாக நடந்து வருகிறார்.

நியாயமா?

படிப்பது இராமாயணம்—இடிப்பது பெருமாள் கோயிலையா?

பேசுவது ஜீவகாருண்யம்—உண்பது கொண்டை மீனையா?

நடிப்பது அஹிம்சாவாதியாக—நடத்துவது தடியடி தர்பாரா?

ஒரு மாகாணத்தின் பிரதமர் என்கிற பொறுப்புள்ள பதவியில் இருக்கும் ஒருவர் இப்படி ஊருக்கு உபதேசியாக இருக்கலாமா?

இருக்கலாமா?

---

# போர்வாள்

---

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 6—8—0 |
| 6 மாதம் | ரூ. | 3—4—0 |

**போர்வாள் அலுவலகம்**
131, பிராட்வே, சென்னை-1.

# நெஞ்சை அள்ளும் எழுத்தோவியங்கள்

| | | |
|---|---|---|
| காதல் பாதையில் | 0 | 5 |
| அரசியல் குமரி (தங்கப்பழம்) | 0 | 3 |
| 144 | 0 | 8 |
| விஷக்கன்னிகை | 0 | 6 |
| சமுதாய பலிபீடம் | 0 | 3 |
| கடவுள் எங்கே | 0 | 3 |
| விதவையின் காதல் | 1 | 0 |
| இன்ப இரவு | 0 | 4 |
| என் கடன் களிப்பூட்டுதலே (என், எஸ். கே.) | 0 | 1½ |
| யார் இந்த ம. பொ. சி. | 0 | 4 |
| காதல் பரிசு | 1 | 4 |
| பூரிப்பு முத்தம் | 0 | 4 |
| எதிர்ப்பிலேவளர்ந்த இயக்கம் | 0 | 8 |
| திராவிடம் | 0 | 3 |
| துரோகி கப்லான் | 0 | 4 |
| ரஸ்புடீன் (வடுருவி) | 0 | 8 |
| எதிகார சமுதாயமே | 0 | 3 |
| கோயில் பெருச்சாளிகள் (வில்லாளன்) | 0 | 6 |
| இலட்சியத்தின் எல்லை | 1 | 0 |
| வேதனைக் குரல் | 0 | 4 |
| பிருந்தாவனத்தில் | 0 | 12 |
| கல்வி நீரோடை (செழியன்) | 0 | 6 |
| இன்ப இரவு (சேரன்) | 0 | 8 |
| கலைக்கோயிலா | 0 | 4 |
| கன்னியா விதவையா | 0 | 8 |
| அன்னை | 0 | 4 |
| இலட்சியவாதி அழகிரிசாமி | 0 | 5 |
| எல்லைக்கு அப்பால் | 0 | 8 |
| முதலாளித்வம் ஒழிக | 0 | 12 |
| இதயக்குமுறல் | 1 | 8 |
| உமர்கயாம் பாடல்கள் | 1 | 4 |
| பிரளய உலகம் | 1 | 0 |
| கலைக்கூத்தியின் காதல் (பாரதிதாசன்) | 1 | 0 |
| ஊருக்கு உழைத்தவர்கள் | 0 | 5 |
| சிதைந்த வாழ்வு | 1 | 4 |
| மனைவி மாற்றம் | 0 | 8 |
| பைத்தியக்காரி | 0 | 6 |
| பொற்கூண்டு | 0 | 6 |
| மீண்டும் வந்தாள் | 0 | 6 |
| முத்தம் | 0 | 6 |
| குமாரி செல்வா | 0 | 6 |
| 33-ம் நெம்பர் அறை | 0 | 4 |
| குறள் வந்த காரணம் | 0 | 4 |
| சாவின் முத்தம் | 1 | 0 |
| புதிய நைனா | 0 | 6 |
| நற்பணியாளர்கள் | 0 | 8 |

**பகுத்தறிவுப் பாசறை**
131, பிராட்வே, சென்னை-1.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)